
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 22 ] சோபகிருது ஆண்டு ஆவணித் திங்கள் 10—9—63 [ இதழ் 1



திருபுவனம் ஸ்ரீ கம்பஹரேஸ்வர் விமானம்

தருமையாதினக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

தேடுந் திரவியமும்
சிற்றறிவும் பற்றுதலும்
கூடும்பொய் என்றருளிற்
கூட்டினுன்—நாடறிய
ஞானப்ர காசனுயர்
நற்கமலை மாநகர்வாழ்
வானப் பிறையணிந்த
மன். (9)

ஆசிரியர் :-
வித்துவான்,
சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்
துணையாசிரியர் :-
வித்துவான்,
சொ. சிங்காரவேலன், M. A.

உ
குருபாதம்
# "ஞானசம்பந்தம்"
தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 22 | 10-9-63 | இதழ் 10

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | திருபுவனம் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் | ... 501 |
| 2 | வணக்கம் | ... 507 |
| 3 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை | ... 508 |
| 4 | தருமையாதீனக் குருபரம்பரைத் தோத்திரம் | ... 513 |
| 5 | அருள்வாக்கு -I | ... 514 |
| 6 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் வாழ்த்துரை | 517 |
| 7 | சித்தாந்த வினுவிடை | ... 529 |
| 8 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் ஆசியுரை | ... 533 |
| 9 | திரு. ச. சிவகுமாரன் M.A.. உரைச் சுருக்கம் | ... 540 |
| 10 | நடை வேறுபாடு | ... 542 |
| 11 | பன்னிரு திருமுறை மாநாடு | ... 548 |
| 12 | செய்திகள் | ... 558 |
| 13 | எதிர்காலம் | ... 561 |

## அட்டைப்பட விளக்கம்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீகம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அருளால் 6-9-63 வெள்ளிக்கிழமைகும்பாபிஷேகம் நடைபெற்றது.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 22 ] சோபகிருது - ஆவணி - 10—9—63 [ இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## திருபுவனம் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம்

திருக்கோயில் இறைவனை வழிபட்டு உய்தற்குரிய தவச்சாலை. திருக்கோயிலிற்குச் சென்று மன மொழி மெய்களால் வழிபாடுசெய்து அங்கு வீற்றிருக்கும் திருவுருவத் திருமேனிகளைக் கண்ணாரக் கண்டு களிகூர்தல் வேண்டும். அவ்வாறு வழிபடுவோர்க்கு அங்கே சிவபிரான் உறைந்து திருவருளை வாரிவழங்குவான்; பசுவினுடைய உடல்

எல்லாம் பரவிநின்ருலும் பால் அதனுடைய மடியகத்தி னின்றே சோரிந்து பயன்படுவது போல இறைவன் அன்பர் களுக்குத் திருக்கோயிலிலேயே வேளிப்பட்டருள்கின்ற இயல்புடைய தண்ணளியாளன்; விறகில் தீ மறைந்திருக் கின்றது; அதுபோல் மறைந்திருக்கும் அவனை இவ்வாறு கண்டு வழிபடுதல் வேண்டும்.

"திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே
உருக்கோலி மந்திரத்தா லெனநினையு மவர்க்கும்
உளனெங்கும் இலனெங்கு முளனென் பார்க்கும்
விருப்பாய வடிவாகி இந்தனத்தி லெரிபோல்
மந்திரத்தால் வந்துதித்து மிகும் சுரபிக்கெங்கும்
உருக்காண வொண்ணாத பால்முலைப்பால் விம்மி
ஒழுகுவதுபோல் வெளிப்பட் டருளுவனன்பர்க்கே"

— (சிவஞானசித்தியார் - 12 சூத். - 4)

என்று அருணந்திசிவாசாரிய சுவாமிகள் அருளும் திரு வாக்கினை ஆழ்ந்துணர்தல் வேண்டும்.

திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டு வலம்வராத வர்கள் பெருநோய்கள் மிக நலியப் பேயர்த்தும் சேத்தும், பிறப்பதற்கே தோழிலாகி இறக்கின்றவர்கள் ஆவர் என்று அப்பர்சுவாமிகள் அருளுவர். திருக்கோயில்களில் சிறப் போடு பூசனைகள் நிகழ்ந்துவருதல் இன்றியமையாதது; அவ்வாறு நித்திய நைமித்திகங்களிற் குறைவு நேர்ந்தால் அரசாங்கத்திற்கே தீமை உண்டாகும் என்றும், மழை வளம் குன்றும் என்றும், களவுகள் முதலிய தீமைகள் மிகும் என்றும் திருமூலர் அருளும் திருப்பாடல் வருமாறு :-

"முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள மாரி வளங்குன்றும்
கன்னங்களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே" (திருமந்திரம்-518)

நம் நாடு தேய்வமணம் கமழும் திருநாடு. திருக்கோயில் கள் நிரம்பிய பெருநாடு. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்று லும் சிறப்புற்ற இடங்களிலேல்லாம் அழகிய சிவாலயங்கள்

நம்நாட்டை அணி செய்வதுடன், ஆத்மீக நெறிக்கு அரணுக வும் உள்ளன. இத் திருக்கோயில்கள் நம் சமயாசாரியப் பெருமக்களால் திருப்பாடல்கள் பெற்றுச் சிறந்துள்ளன என்றும், பாடல்பெருதன என்றும் இருவகைப்படும். சமயா சாரியர் நால்வராற் பாடப்பெருதனவாயுள்ள பல தலங்கள், அருணகிரிநாதர் போன்று அவர்களுக்குப் பின்னேவந்த அருளாளர்களால் சிறப்புப் பேற்றும் திகழ்கின்றன.

இத்திருத்தலங்களுள் ஒன்ருய்ச் சோழநாட்டில் காவிரிக் கரையிலுள்ளதும், சோழப் பெருமன்னன் மூன்ரும் குலோத் துங்கனது அற்புதமான கலைத் திருப்பணி உடையதும், சிற்பச் சிறப்புக்கள் உடையதும், சீரிய கலைக்கோயிலாக விளங்குவதும், திருபுவனம் ஸ்ரீ கம்பஹரேசுவரசுவாமி திருக்கோயில்; ஸ்ரீ தர்மசம்வர்த்தனி சமேதராக இங்கு வீற்றிருக்கும் இறைவன், கம்பம் கெடுத்த கண்ணுதற் பிராணுக உள்ளான்; அன்றியும், நரசிம்ம வடிவெடுத்த திருமாலுடைய சினவெறியைச் சரபப் பறவையாக வடி வெடுத்துச் சிவபிரான் அருள்புரிந்த இணையற்ற சிறப்புடை யது இத் திருத்தலம். தருமையாதீனத்திற்குச் சொந்தமான இருபத்தேழு திருக்கோயில்களுள் ஒன்ருக விளங்கும் இத் திருக்கோயில், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களால் பெரும் பொருட் செலவுடன், புதுப்பித்துத் திருப்பணிகள் செய்யப் பெற்று 6—9—63 அன்று அன்புலகு வியந்துபோற்ற அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. நாட் டின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடிக் கும்பாபிஷேக தரிசனம் செய்து மகிழ்ந்தார்கள்.

மூன்ரும் குலோத்துங்கச் சோழன் கலைப்பணியாற் சிறந்து விளங்கும் இத் திருக்கோயில் விமானம், தஞ்சை இராசராசேச்சுரம், கங்கைகொண்டசோழபுரம் கங்கை கொண்டசோளேச்சுரம், தாராசுரம் இராசராசேச்சுவரம் ஆகியவற்றின் அமைப்புடன் ஒப்புடையதாய்ப் பிற்காலச் சோழர் கலைப்பணிகளுக்குப் பெருவிளக்கமாக நிற்பதாகும்.

நாட்டிய பேதச்சிற்பங்கள், இராமாயணச் சிற்பங்கள், இதிகாச புராண வரலாற்றுச் சிற்பங்கள், கல்வெட்டுக்கள் அனைத்தும் உள்ள இத் திருக்கோயில் வரலாற்றுப் பண்புடையதாகும்.

திருபுவனம் ஸ்ரீ கம்பஹரேசுவரர், ஸ்ரீ தர்மசம்வர்த்தனி, ஸ்ரீ சரபேசுவரர் திருவருள் பேற்றுய்ந்த அன்பர்களுடைய சேவிக்கும் சிந்தைக்கும் விருந்தாக அமைந்திருந்தது பன்னிரு திருமுறை மாநாடு. தக்க பல அறிஞர்களைக் கொண்டு சொல்மாரி புரிவித்துப் பொருளின்பத்தில் அனைவரையும் மூழ்கவைத்தது பன்னிரு திருமுறைச் சமயப் பேரவை. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் அருளாசியோடு தொடங்கிய மாநாட்டில் முறையான சமயச் சொற்பொழிவுகள் நன்கு நிகழ்ந்தன. தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஆகம நுட்பங்களை அறிந்த சிறப்புடைய சிவாசாரியர்கள் பலரும், யாகசாலை பூஜை முதலிய எல்லா நிலைகளிலும் செப்பமாகப் பணிபுரிந்தார்கள். திருமுறைப் பண்ணிசைவாணர்களும் அகண்ட பாராயணத்தின் மூலம் அன்பர்களின் சிந்தைகளிலெல்லாம் திருமுறை வெள்ளத்தைப் பாய்ச்சினார்கள்.

கலைக் கோயிலாக விளங்கும் இத் திருக்கோயில் மகா கும்பாபிஷேகத்தில் மக்கள் மனத்தை யீர்க்கும் ஒரு புதிய அமைப்பையும் காணலாயிற்று. ஆம்; கலைக்கூடம் ஒன்றும் திருக்கோயில் தெற்குத் திருச்சுற்றில் அமைக்கப் பெற்றிருந்தது. அழகிய சிற்பங்கள் பலவும் சிறந்த ஓவியங்களாகத் தீட்டச் செய்து அழகுற அமைக்கப்பட்டிருந்தன. இக் கலைக்கூடத்தைத் திறந்துவைத்து அழகிய ஒரு விரிவுரையாற்றினார்கள், சென்னை மாநில இந்துசமய அறநிலைய ஆணையர் உயர்திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பி.ஏ., பி.எல்., அவர்கள். திரளானமக்கள் இக்கலைக்கூடத்திற்குப் போந்து, சோழர் காலப் பணிச் சிறப்பை உணர்ந்து மகிழ்வெய்தினார்கள்.

இக்கலைகள் முதலிய அனைத்திலும் சிவபிரான் திகழ் வதைக் கண்டு திருநாவுக்கரசு சுவாமிகள் முதலிய சான்றோர் வியந்து போற்றியுள்ளனர் ;

" கல்வி ஞானக் கலைப்பொரு ளாயவன்
செல்வம் மல்கு திருக்கானூ ரீசனை
எல்லியும் பகலும் மிசை வர்னவா
சொல்லி டீர் நுந் துயரங்கள் தீரவே " (5.76.6)

இக்கலைக் கூடத்திற்குப் போந்து கண்டு மகிழ்ந்த மக்களும் கலைப்பொருளாய கண்ணுதற்பிரானையே தொழுதனர் என்பது சொல்லாமலே விளங்கும்.

மகாகும்பாபிஷேக விழா மலராக ஒரு பெருங் கருத்துக் களஞ்சியம் அழகிய பனுவலாக வெளிவர ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருவுளங்கொண்டபடி, பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் பொதிந்த விழா மலரை அழகுற அம்மாநாட்டில் மகாகும்பாபிஷேக விழா மலராக வெளியிட்டார்கள் தமிழ் நாட்டு அரசாங்க அறநிலைய அமைச்சர் நல்லறங்காவலர் கனம். திரு. எம். பக்தவத்சலம் பி.ஏ., பி.எல்., அவர்கள். மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும், திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களும் எழுந்தருளிச் சிறப்புரைகள் வழங்கப் பன்னிரு திருமுறை மாநாடு நிறைவு பெற்றது.

கலைக்கவின் நிரம்பிய இத் திருக்கோயிலின் புத்தழகும், ஸ்ரீ கம்பஹரேஸ்வரர், ஸ்ரீ தர்மசம்வர்த்தனி, ஸ்ரீ சரபே சுவரரின் புதுப் பொலிவும், திருவருட் பெருக்கும் விளக்கும் திருவிழாவாக அமைந்து, தமிழ்நாட்டிற்கே பெருமை தரும் தேசீயத் திருவிழாவாக அமைந்தது திருபுவனம் மகாகும்பா பிஷேகம். 'சீன அரக்கனுல் விளைந்துள்ள நாட்டின் நடுக் கம் தீர்க்கும்படி இந்நடுக்கம் தீர்த்த இறைவனையே வேண் டிப் பிரார்த்தனை செய்யவேண்டும்' என்றே இம் மாநாடு ஒரு முகமாகக் கருதியது ; கலந்துகொண்ட அறிஞர்களின் ஒரே

குரலாக இக் கருத்தே ஒலித்தது: இறைவன் அதனை ஏற்றுக் கொண்ட திருக்குறிப்பை உண்மை அன்பு ததும்பிய உள்ளங்கள் அன்று அப்புண்ணியத் தலத்தில் உணராமல் இல்லை. தம் அருளாட்சியில் மகாகும்பாபிஷேகங்கள் பல வற்றை மிகச் சீரிய முறையில், நாடு வியந்து போற்றும் வகையில் செய்தருளிவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இத் திருக்கோயில் திருப்பணி, கும்பாபிஷேக விழாவையும் இவ்வாறு பெருஞ்சிறப்புடன் நிறைவித்தருளி னார்கள்.

“ தடமலரா யிரங்கள் குறைவொன்ற தாக
நிறைவொன்று தன்கண தனல்
உடன்வழி பாடுசெய்த திருமாலை யெந்தை
பெருமானுகந்து மிகவும்
சுடரடியான் முயன்று சுழல்வித் தரக்கன்
இதயம்பிள ந்த கொடுமை
அடல்வலி யாழியாழி யவனுக் களித்த
அவனநமக்கொர் சரணே. ”

— திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்



ஸ்ரீ சரபேசுவரர்

# வணக்கம்

திருவைந்தெழுத்தை ஓதி ஓதி அநுபவம் கைவந்த திருமூலர் 'அதனைத் தின்றுகண்டேன்; தித்தித்தது' என்று தம் அநுபவம் கூறியருளி உலகை ஆற்றுப்படுத்துகின்றார். இந்த அற்புதமான திருமந்திரத்தை எடுத்துக்கொண்டு அழகான விளக்கம் தந்தருளி இவ்விதழை மந்திரமணம் கமழச் செய்தருளியுள்ளார்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள். 'மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழை'யும் உணர்ந்தின்புறவேண்டும் என்ற எண்ணத்தை இவ்வருளுரை அன்பர்கள் நடுவண் விளைக்குமென்பது நம்பிக்கை.

திருபுவனம் ஸ்ரீ கம்பஹரேசுவரசுவாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேகம், தருமையில் நிகழ்ந்த ஆவணிமூலத் திருநாள் ஆகியவற்றின் நிகழ்ச்சி முறைகள் முதலிய விவரங்கள் வந்து கலந்துகொள்ள வாய்ப்பில்லாத அன்பர்களுக்கும் பயன்படுமாறு விரிவாக அமைக்கப்பட்டுள்ளன. பன்னிரு திருமுறை மாநாட்டின் தொடக்க ஆசியும். ஆவணிமூலத் திருநாள் ஆசியும் அன்பர்களுக்கு அரும்பெரு விருந்தாக அமைந்துள்ளன.

சித்தாந்த வினாவிடை, எதிர்காலம் போன்ற பிற வழக்கம் போல் இனிது தொடர்கின்றன. இலக்கியங்களில் நடை வேறுபாடு பற்றிய கட்டுரை இலக்கிய ஆராய்ச்சி நிலையில் ஒரு புதிய விருந்தாக உள்ளது.

ஸ்ரீ சொக்கநாதப்பிரான் திருவருளும், ஸ்ரீ கம்பஹரேசுவரர், ஸ்ரீ சரபேசுவரர் திருவருளும் இணைந்து மணக்க இவ்வாறு தருமையாதீனத் தடாகத்தில் அன்பர்களாகிய வண்டுகள் சுவைத்தின்புற மலர்கின்றது இந் நறுமலர்.

உ
குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

திருச்சிற்றம்பலம்

ஒன்றுகண் டீர்உல குக்கோரு தேய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது
நன்றுகண் டீரினி நமச்சிவா யப்பழந்
தின்றுகண் டேன்இனித் தித்தித்த வாறே.

திருச்சிற்றம்பலம்

— திருமூல நாயனார்

உண்மை அறிவு இன்ப உருவாகிய சிவபிரான், உலகிற்கு என்றும் இருந்து அருளொளியை வழங்கிக்கொண்டிருக்கும் இடம் திருக்கயிலை, அங்கு அவன் என்றும் இருந்து எல்லா வற்றையும் அறிந்து யாவர்க்கும் தோன்றாத நிலையில் நின்று அருளுதலே யன்றி, அவ்வப்பொழுது அங்கு நின்றும் தன் அடிய வர்களையும் இந்நிலவுலகில் வரவிடுத்து அருளொளியைப் பரப்பச் செய்கின்றான். சமய குரவருள் ஆலால சுந்தரரும், அகச் சந்தானாசாரியருள் பரஞ்சோதி முனிகளும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாவார்கள். ஞானசந்தானங்களாகிய சைவ ஆதீனங்களும் திருக்கயிலாய பரம்பரை யாதல் தெளிவு. இவ்வாறு ஒரு காலத்து இந்நிலவுலகில் வந்து தங்கித் திருவருள் ஒளியைத் திகழ்வித்த ஆசாரியரே திருமூல நாயனார்.

நாயன் மார்களில் ஒருவராகிய திருமூலரைத் தமது திருத் தொண்டத் தொகையுள் குறிக்கும் பொழுது, நம்பியாரூரர்,

"நம்பிரான் திருமூலன்" எனக் குறித்தருளினர். 'பிரான்' என்பது, 'தலைவன்' எனப்பொருள் தரும். திருமூலரைப்போலத் திருஞான சம்பந்தரை "எம்பிரான் சம்பந்தன்" என அவர்குறித்தார். அதனால், ஞானசம்பந்தரைப்போலவே திருமூலரும் பரம ஆசாரிய மூர்த்திகள் என்பது தெளிவாகும்.

திருமூல நாயனர் திருக்கயிலையில் இந்திரன் மால் அயன் முதலாம் இமையவர்க்கும் நெறியருளும் முதற் சந்தானசாரியராகிய நந்தி பெருமானது திருவருள் பெற்ற ஒரு நான்மறை யோகிகள்; அணிமாதி அட்ட சித்திகளையும் பெற்றவர். இவர் அகத்திய முனிவரது பழைய நட்பை நினைந்து அவருடன் சில நாள் இருக்க விரும்பிக் கயிலையை விட்டு நீங்கி நிலவுலகில் வந்து, திருக்கேதாரம், நேபாளத்துப் பசுபதீச்சுரம், காசி, ஸ்ரீசைலம், திருக்காளத்தி, திருவாலங்காடு வணங்கிக்கொண்டு, திருக்கச்சியை அடைந்து ஏகாம்பர நாதரை வணங்கிச் சிலநாள் அங்குள்ள முனிவர்களோடு அளவளாவியிருந்து, பின்பு திருவதிகையை வணங்கித் திருத்தில்லையை அடைந்து கூத்தப் பெருமானைக் கும்பிட்டுக்கொண்டு சில நாள் இருந்தார். அப்பால் காவிரிக்கரையை அடைந்து திருவாவடுதுறையை வணங்கி, அங்கேயே இருக்கவிருப்பம் உண்டாகியும், ஏதோ ஓர் எண்ணத்துடன் அத்தலத்தைக் கடந்து சென்றுர்.

செல்லும் வழியில், 'சாத்தனூர்' என்னும் ஊரினனுகிய 'மூலன்' என்னும் இடையன் தனியாகப் பசுக்களை மேய்த்துக் கொண்டிருக்கையில் இறந்துவிட, அவனல் மேய்க்கப்பட்ட பசுக்கள் அவனிடத்துள்ள அன்பால் அவன் உடம்பினைச் சூழ்ந்து கொண்டு மோந்தும் கதறியும் துன்புறுதலை யோகிகள் கண்டார். ஆக்களின்மேல் வைத்த இரக்கத்தினல், தமது உடம்பை ஒரு பாதுகாப்பான இடத்தில் வைத்து, உயிரை மூலன் உடம்பில் பாய்ச்சி மூலனய் எழுந்தார். அதனல், 'திருமூலர்' எனப் பெயர் பெற்றுர். ஆக்கள் மகிழ்ச்சியுற்றுத் துள்ளிக் குதித்து மேயச்சென்றன. மாலையில் பசுக்களை அவற்றிற்கு உரியவர் வீட்டிற்செல்ல விடுத்து, அன்று இரவு ஒரு பொதுமடத்தில் இருந்தார்.

மூலன் மனைவி தம்மைத் தீண்டவந்தபொழுது அவளை மறுத்துப் போக்கினர். மறுநாட்காலையில் அவள், தன் கணவன் பித்துக்கொண்டதாக ஊரெங்கும் அறிவிக்க, அறிவுடைய பெரியோர் சிலர் அடைந்து அவரது யோகநிலையை உணர்ந்து,

'இவருக்குப் பித்து இல்லை; சிவயோகியாகிவிட்டார்' என்று சொல்லி அவளைத் தேற்றியனுப்பினர்.

பின்பு நாயனர் முன்பு தாம் வைத்த உடம்பைச் சென்று தேடியபொழுது அது காணப்பட்டிலது. அதன் காரணத்தை அவர் தமது ஞான நோக்கினல் நோக்கிய பொழுது, சிவபெருமான் தான் சொல்லிய ஆகமப் பொருளைத் தமிழால் இந்நிலவுலகில் செய்தருளுதற் பொருட்டு அதனை மறைத்தனன் என்பதை உணர்ந்தார். அதனல் அவன் அருள்வழியே நிற்கக் கருதித் திருவாவடுதுறையை அடைந்து, மூலத் தானத்தின் மேற்குப் புறத்தில் உள்ள அரசமரத்தடியில் சிவயோகத்தில் அமர்ந்தார். ஆண்டிற்கு ஒருமுறை யோகத்தினின்றும் எழுந்து ஒரு திருப்பாடலை அருளிச்செய்தார்; மூவாயிரம் ஆண்டுகள் இருந்து மூவாயிரம் திருப்பாடல்களை அருளினர். அவை 'திருமந்திர மாலை' எனப் பெயர்பெற்றுப் பத்தாந்திருமுறையாய் விளங்குகின்றன.

மந்திரம் என்பது அரிய தொடர் என்பதும், அரிய பல பயன்களைத் தருவது என்பதும் அனைவரும் அறிந்தவை. திருமூலர் ஒன்றல்ல; இரண்டல்ல; மூவாயிரம் மந்திரம் அருளியுள்ளார். அவைகளில் முந்நூறு பாடல்கள் மந்திரங்களாகவே அமைந்துள்ளன என்றும், முப்பது பாடல்கள் உபதேசமாக உள்ளன என்றும் கூறுதல் மரபு. முப்பது உபதேசத்தையும் முதல் தந்திரத் தொடக்கத்திலே காணலாம். மந்திரங்கள் பல நான்காந் தந்திரத்தில் உள்ளன.

சிவபெருமான் சொல்லிய ஆகமப் பொருள்களை எல்லாம் ஒன்பது தந்திரங்களில் திருமூலர் அமைத்துக் கூறியுள்ளார். சைவாகமங்களின் நாற்பாதங்களாகிய 'சரியை, கிரியை, யோகம், ஞானம்' என்னும் நான்கும் திருமூலர் திருமுறையிலே உள்ளன.

"தண்ணிலவார் சடையார் தாம் தந்தஆ கமப்பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினல் தமிழ்வகுப்ப"

எனவும்,

"ஊனுடம்பிற் பிறவிவிடம் தீர்ந்துலகத் தோருய்ய
ஞானம்முதல் நான்கும்மலர் நற்றிருமந் திரமாலை"

எனவும் வருவன சேக்கிழார் திருவாக்குக்கள்.

திருமந்திரத்துள் அறநெறி உண்டு; ஒழுக்கம் உண்டு; அரசநீதி உண்டு; தெய்வ வழிபாட்டிற்குரிய யந்திர மந்திர உபாசன முறைகள் உண்டு; புராண வரலாறுகள் உண்டு; தத்துவம் உண்டு; சிவபூசை உண்டு; யோகம் உண்டு; ஞானம் உண்டு; மற்றும் இதோபதேசங்கள் பல உண்டு. எனவே, திருமந்திரத்தில் இல்லாத பொருளே இல்லையாம். இவை அனைத்தும், 'நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் கருணையினால் அருளிச்செய்யப்பெற்றன. திருமந்திரத்தின் தொடக்கம், "ஒன்றவன்றானே" என்பது எனச் சேக்கிழார் திரு வாக்கால் உணரப்படுகின்றது. சித்தர் பாடல்களின் முறையில் மறைபொருளாக அமைந்த பலபாடல்கள் உள்ளன. திருமந்திரம், உபதேசத்தில் தொடங்கி, அணைந்தோர் தன்மையில் முடிகின்றது எனலாம். முன்னும் பின்னும் பாயிரமாகவும் ஒழிபாகவும் சில பாடல்கள் உள்ளன. எனவே, திருமந்திரத்தை ஓதியுணர்பவர் எல்லாவற்றையும் உணர்ந்து எல்லாப் பயனும் பெறுவர்.

திருமந்திரத்தில் மக்கள் முடிந்த முடிபாக அறியவேண்டு வதை மிகச்சுருக்கமாகக் கூறும் பாடல்கள் சில உள. அவற்றுள் ஒன்றே மேற்காட்டப்பட்டது. அஃது 'அணைந்தோர் தன்மை' என்னும் பகுதியில் உள்ளது.

> " அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
> பொருள்நூல் தெரியப் புகின் "

என்பது திருவருட்பயன். 'வேதம் ஆகமம் முதலிய எல்லா நூல்களின் சாரமும் திருவைந்தெழுத்தே' என்பது இதன் பொருள். அதனையே இத்திருமந்திரம் நன்கு தெளிவிக்கின்றது.

'உலகுக்கு ஒப்பற்ற தலைவனாகிய கடவுள் ஒருவனே; அவன் உயிர்கட்கெல்லாம் உயிராய் நின்று அவைகளை இயக்கி வருகின்றான். அவனை நன்றாக-உண்மை ஞானத்தால்-காண்பது, 'நமச்சிவாய' என்னும் மந்திரத்தினாலேயேயாம்; அம் மந்திரத் தின் பயனை நான் அநுபவத்தில் கண்டு இன்புற்றேன்' என் கின்றார் திருமூலர்.

> " கனியினும் கட்டி பட்ட கரும்பினும்.........
> இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே "

என்றும்,

"புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே"

என்றும் அப்பர் அருளிச்செய்த அருங்கனியின் சுவையை இத் திருமந்திரத்திலும் நாம் கண்டு மகிழ்கின்றோம்; இதனோடு நின்று விடாமல் அக் கனியின் சுவையை நாம் உண்டும் மகிழ வேண்டும். அவ்வாறு உண்டு மகிழ்ந்தவர்களது தன்மையையே மேற்சொல்லிய அணைந்தோர் தன்மையில் திருமூலர் விரித்து அருளிச்செய்தார்.

'ஆலைக் கரும்பும் அமுதும் அக்காரமும் போல்வது சிவானந்தம்' 'அதனை அடைந்தபின், அண்டத்தலைவரும் எண்டிசையோரும் என்கைத் தலத்துள்ளே வந்து அடங்கிவிட்டனர்', 'நமன் வரின் அவனை ஞானவாள்கொண்டு எறிவேன்; சிவன் வரின் அவனுடன் செல்வேன்' என்பன முதலாகக் களித்துப் பாடுகின்றார் திருமூலர். அவரது திருமந்திரத்தின் வழிநின்று உலகம் எல்லா இன்பமும் எய்திக் களிப்பதாக.

---

தெய்வத் தமிழோ கலைப் பொக்கிஷமாக விளங்குகிறது; எடுக்க எடுக்கக் குறையாத பொருள்வளம் உடையது. நாம் காட்டுகின்ற மேற்கோள்கள் எல்லாவற்றிற்கும் இத் தெய்வத் தமிழ் இடந்தந்து நிற்கும். நம் நாட்டுக் கலைப் பொக்கிஷங்களைப் பிறநாட்டார் மொழிபெயர்த்தும், விரும்பிப் படித்தும் பயன்பெறுகின்றனர். ஆனால் நாமோ நம்மிடம் உள்ள கலைப் பொருளை மறந்து பிறநாட்டு மொழியாசிரியர்கள் கூற்றை மேற்கோளாக எடுத்துக் கூறுகிறோம். நம்மிடம் சரக்கு இல்லையென்றால் பிறர் கையை எதிர்பார்க்க வேண்டியதுதான். நம்மிடம் பழங்காலச் செல்வம் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளை வைத்துக்கொண்டு பிறர் கையை எதிர்பார்ப்பது கூடாதல்லவா?

— கயிலைக் குருமணி.

---

# தருமையாதீனக் குருபரம்பரைத் தோத்திரம்

பாடியருளியவர், இவ்வாதீன அடியவருள் ஒருவராய் இருந்த

ஸ்ரீமத். சட்டநாதத் தம்பிரான் சுவாமிகள்.

## இருபத்தெண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

அருண்மேவு கமலையுள் ஞானப்பிர காசகுரு
அருள்பெறும் தருமை வாழ்வாம்
அண்ணல்குரு ஞானசம் பந்ததே சிகரவர்பின்
ஆனந்த பரவ சர்சீர்
அமைசச்சி தானந்த குரவர்புக ழநுதினம்
ஆர்மாசி லாமணி யரே
அணிஞான சம்பந்த குரவர்திரு ஞானசம்
பந்தரருள் மேவு சீர்த்தித்
தெருள்மேவு திருவம் பலக்குரவ ரழகிய
திருச்சிற்றம் பலகுரவ ராம்
திருநாவுக் கரசகுரு திருவருட் பாஓதும்
சிவஞான குரவ ரவர்பின்
திகழ்சச்சி தானந்த குரவர்முத் துக்குமர
தேசிக ரவரரு ளெலாம்
சேர்ஞான சம்பந்த தேசிகர் கந்தப்ப
குருமாசி லாமணி யரே
வரமேவு சச்சிதா னந்தகுரு மாணிக்க
வாசகக் குரவ ரவர்பின்
மருவுசிவ ஞானகுரு மாணிக்க வாசகர்
மகிதல மெலாம்புக ழுறும்
வண்மையுறு சிவஞான தேசிக ரவர்பினர்
வளர்சச்சி தானந்த ரே
வாய்மைமா ணிக்கவா சகக்குரு சுப்பிர
மணியர்சண் முகக்குரவர் பின்
திருமருவும் அருள்பெறுங் குருவாகி உலகினிற்
சிவனடி யார்க ளாகத்
திகழ்வுறும் சரியையர் கிரியைய ரன்றியும்
திண்மையுறு சிவயோக மாம்
செயல்புரி யோகியர் உலகெலாம் சிவமெனத்
தேர்சிவ ஞான முடையோர்
தெளியஅருள் கயிலைசுப் பிரமணிய குரவரவர்
திருவடி வணங்கி வாழ்வாம்.

# அருள்வாக்கு - I

திரு. அ. ச. ஞானசம்பந்தம் எம். ஏ.,

உலகில் உள்ள மனிதர்கள், தாம் எடுத்த காரியத்தில் வெற்றிபெறும்பொழுது தங்களுடைய முயற்சியாலும் பலத்தாலும் வெற்றி கிடைத்துவிட்டது என்று சந்தோஷப்படுவதும், துயரம் அல்லது தோல்வி ஏற்பட்டபொழுது, கடவுள் கண் திறக்கவில்லை என்று கடவுளைப் பழி தூற்றுவதும் இயல்பாக இருக்கின்றன. ஆனால் அறிவுடைய பெரியோர்கள் அவ்வாறு செய்வது இல்லை. அதன் எதிராக, மனிதன் எவ்வளவு வன்மைபெற்று இருந்தாலும் அவனுடைய கட்சியில் நியாயம் அல்லது அறம் இல்லை, என்றால் அவன் வெற்றி பெறமுடியாது என்றே கருதினார்கள். நம்முடைய நாட்டில் வழங்கும் பெரிய இதிகாசங்கள், புராணங்கள், காப்பியங்கள் ஆகிய எல்லாம் இந்த உண்மையை மறவாமல் வலியுறுத்துகின்றன.

ஈஸ்வரன் என்றுகூடப் புகழப்பட்ட இராவணன் எவ்வளவு வலிமை பெற்று இருந்தான் என்பது கம்பநாடனைப் படிக்கின்றவர்கள் அனைவரும் அறியமுடியும். மூன்றுகோடி வாழ்நாள் முயற்சியால் பெற்ற பெரிய தவம், உலகில் யாராலும், எப்பொழுதும் வெல்லப்பட முடியாதவன் என்ற வரபலம் ஆகிய அனைத்தும் கூட இறுதி நேரத்தில் அவனுக்குத் துணைசெய்யவில்லை. இன்னும் சொல்லப்போனால் 'என்னையே நோக்கி நான் இந்நெடும் பகை தேடிக்கொண்டேன்' என்று சொல்லுகின்ற அளவுக்கு அகங்காரம் படைத்தவனாக இருந்தான்.

பலம் உடையவர்களிடத்தில் சிறந்த அறிவு அமையவில்லையானால் இத்தகைய தவறான முடிவுகளுக்கே வரநேரிடும். இவற்றையெல்லாம் மனத்தில் வைத்துக்கொண்டு பழைய புறநானூற்றுப்பாடல், நான்குவகையான படைகளும் நிறைந்து இருந்தாலும்கூட அறத்தின் அடிப்படையில்தான் அரசனுடைய வெற்றி அமைந்து இருக்கிறது என்று கூறுகிறது. "நான்குடன் மாண்டதாயினும், மாண்ட அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்று பாடிச் செல்லுகின்றது. இந்தச் சிறிய

உண்மையை மறந்துவிட்டகாரணத்தாலோ அன்றி, மதிக்காத காரணத்தாலோதான் இராவணேஸ்வரன் பரிதபிக்கத் தகுந்த தோல்வியையும் சாவையும் அடைந்தான். எல்லை இல்லாத வரங்கள் என்னும் பாற்கடலைச் சீதை என்று சொல்லப்படும் சொட்டுப் பிறைமோர் திரித்துவிட்டது என்றே மண்டோதரி புலம்புகிறாள். "அளப்பரிய வரம் என்னும் பாற்கடலைச் சீதை எனும் பிரைகடை இட்டு அழிப்பதனை அறிவேனோ" என்று வருந்துகிறாள் மண்டோதரி.

எனவே ஒருவன் எவ்வளவு வன்மையுடையவனாயினும், அறிவுடையவனாயினும், சூழ்ச்சித்திறன் உடையவனாயினும், அது பற்றிக் கவலை இல்லை. இவையனைத்தும் அறநெறிக்கு அடங்கித் தொழிற்படும்பொழுது பிற சாதனங்கள் இல்லாவிடினும் அங்கே வெற்றி கிடைக்கிறது. ஆனால் அறியாமை உடையவன் மட்டுமே அவ்வாறு கிடைக்கும் வெற்றிக்குத் தானே காரணம் என்று நினைக்கின்றான். ஆனால், அறத்தின் அடிப்படையில் அமையாத பலம்கூடச் சில சமயத்தில் வெற்றிபெறுகிறது. அதைக் கண்டு நாமும் வியப்பு அடைகிறோம் இதுபற்றிக் கூறவந்த நம்முடைய பெரியவர்கள், மறம் வெற்றிபெற்றுவிட்டது என்று நம்பவேண்டா; அறத்தின் துணை இல்லாது பெறும் வன்மை சோளக்கொல்லையில் நிற்கும் காவல் பொம்மைபோல ஆகும் என்றனர். பார்ப்பதற்குப் பயங்கரமாகக் காட்சியளிக்கும் இந்தப் பொம்மை, குருவிகளையும் பறவைகளையும் ஓரளவு பயமுறுத்துகிறது என்றாலும், ஒவ்வொரு காற்று அடிக்கும் பொழுதும் கீழே விழுந்துவிடுகின்றது. அதேபோல அறத்தின் கலப்பு இல்லாத மறம் பெறுகின்ற வெற்றி அந்த நேரத்தில் ஏதோ வெற்றிபோலக் காணப்பட்டாலும் உண்மையில் அது நிலைத்து நிற்பதும் இல்லை, தன்னை அணுகுகின்றவர்களுக்குப் பலன் தருவதும் இல்லை. உலகம் தோன்றிய நாளிலிருந்து இந்த உண்மை மறக்கப்பட்டதும் இல்லை, மறுக்கப்பட்டதும் இல்லை. இராவணன் மட்டுமல்ல, துரியோதனன் முதல், சூரபத்மன் முதல், ஹிரண்யன் வரை அனைவரும் இந்தப் பேருண்மைக்கு, அதாவது அறம் இல்லாத வெற்றி நிலைக்காது என்ற பேருண்மைக்கு இலக்காக அமைந்துள்ளனர். இன்றுமட்டும் சரித்திரம் பொய்த்துவிடவா போகிறது.

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## திருவடி பரவும்

## இருபத்தெண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

சோதிடர். திரு. K. R. சுப்பிரமணியம்

திருவுலவு மணிமார்ப னயனுதி தவசித்தர்
திசையட்ட பாலக ருடன்
தேடிவரு மோங்கார வளமேவு கைலாய
திவ்வியப ரம்ப ரையினர்
செயலாற்றி யுளமுறைகள் பிறழாது நெறியான
சிவசமய தவயோ கமாஞ்
சிங்காத னத்திருந் தருளரசு புரிசுமுக
சின்மயா னந்த மோங்கத்
தருமபுர நகரிலுறை யெழில்குரும காசன்னி
தானத்தி னினிய பண்பைத்
தாங்கிவரு செந்தமிழ்க் கல்லூரி மொழிவளந்
தனையுலக மாந்த ரெளிதாய்த்
தானறிந் தன்புநெறி கொண்டொழுக பற்பலத்
தமிழ்நூல் தொகுத்து மீந்து
தளராது பிரசங்க முரசங்க ளெங்கணுந்
தவறுதொ லித்து வரவும்
பொருளுதவி மாணவர்க் கமுதுதவி சைவநிலை
புகழோங்கி வருவி தத்தில்
போதிக்க நிறைவான கல்வியும் மனதான்ற
பூசைதனில் நேச நிலையும்
பூரித்த இன்சொலரு ளாசிரிய ரின்குழாம்
பொதுநலப் பணிகள் யாத்தும்
பொலிவுபெற கருணையுறு வடிவுடைய குருமகான்
புகலரிய சமுக மதனைக்
கருதிமகிழ் வொடுநலவ ணக்கஞ்செ லுத்திநான்
கழறுவது யாதென்னி லென்
காட்சிநிறை அஷ்டதச புஜமகா லக்ஷ்மிதுர்க்
காதேவி கருணை மிக்கீர்
கனிவுதரும் அருளாசி வேண்டுதும் நேரினிற்
காணவச மொவ்வாமை யாய்க்
கடினமுள காலவகை யாலிந்த முறையினைக்
கைக்கொண்ட தென்ப மாதோ.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்துக்குச்
சொந்தமான

## திருபுவனம் ஸ்ரீ கம்பஹரேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

## மகா கும்பாபிஷேக விழாவில்

நிகழ்ந்த

# பன்னிருதிருமுறை மாநாட்டினைத்

"தருமையாதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

தொடங்கி வழங்கியருளிய

# வாழ்த்துரை

---

" அண்ணல் ஆலவாய் நண்ணி னுன்றனை
எண்ணி யேதொழத் திண்ணம் இன்பமே "

உலகில் உரைசேரும் எண்பத்து நான்கு நூருயிரமாம் யோனி பேதங்களையுடைய அளவற்ற உயிர்களை யெல்லாம் நிரைசேரப் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய் எங்கும் நிறைந்து நிற்பவன் இறைவன். அவனை அறிந்து வழி படுவதே உண்மையில் உயிர்கள் இம்மை மறுமை நலங்களை அடைதற்குரிய வழியாகும். இதனை, 'அவரவர் செய்த பூஜாபலம்' என்று உலகில் வழங்கும் வழக்கத்தாலும் நன்குணரலாம்.

மக்களேயன்றி மால், அயன், இந்திரன் முதலிய கடவுளர்கள் தம் தம் பெரும்பதவிகளில் இன்புற்று வாழ் வதும் இறைவன் வழிபாட்டின் பயனே என்பதை.

" வண்டுளருந் தண்துழாய் மாயோன் இறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தேள் இறுமாப்பும்
அண்டர்தொழ வாழ்உன் இறுமாப்பும் ஆலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால் "

என்னும் பகுதியால் தெரிவிக்கின்றது திருவிளையாடற் புராணம்.

" வானம் ஏத்தயான் வைகுந்த வாழ்வுபெற் றதுவும்
ஞான நான்முகன் சத்திய உலகம்நண் ணியதும்
ஏனை விண்ணவர் தத்தம வாழ்க்கைஎய் தியதும்
ஆனு யர்த்தவன் அருட்குறி அருச்சனைப் பயனால் "

— காஞ்சிப் புராணம்.

எனச் சிவனடியார்களுள் முதலடியாராக வைத்து எண்ணப் பெறும் திருமால் சிவபரம் பொருளை வழிபடும் பயனைத் தெரிவிக்கிறார்.

இங்ஙனம் எல்லா இன்பங்களையும் எய்துதற்கு இறைவனை எவ்வாறு வழிபடுவது? இறைவன் எங்கும் நிறைந்துள்ளவன்; ஆனால், ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாதவன்: குணங் குறிகள் அற்றவன்; காண்டற்கரியவன், அவனை நாம் எவ்வாறு கண்டு வழிபடுவது? பால், பசுவின் உடம்பெங்கும் நிறைந்துள்ளதாயினும் அதனை நாம் பெறுதற்குரிய இடம் பசுவின் மடியே அல்லவா? அதுபோல, இறைவன் எங்கும் நிறைந்திருப்பவனாயினும், அவனை நாம்கண்டு வழிபடுதற்குரிய இடம் திருக்கோயிலே யாகும்.

" மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றோ
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலு மூம ரொன்றையு முணரா ரந்தோ "

என்று சிவஞானசித்தியாரில் கூறியபடி, வானுலகத்தில் உள்ளவர்களும் இம் மண்ணுலகில் வந்து திருக் கோயில் வழிபாட்டினைச் செய்து அளவற்ற பெரும் பயன்களை அடைந்தனர் என்பது புராணங்களில் பலவிடத் தும் காணப்படுவது.

விண்ணுலகில் இறைவனை அபிஷேகித்து ஆராதனை செய்யும் கிரியை முறைகள் இல்லை. எனவே திருமால் பிரமன் முதலிய தேவர்யாவரும் மண்ணுலகிற்கு வந்து வழிபட்டு இறையருள் பெறவிழைவதைத் திருமுறைகளும் தலபுராணங்களும் தெரிவிக்கின்றன.

" கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே"

— அப்பர்.

" புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப்பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்றுநோக்கி
...........திருமாலாம் அவன் விருப்பெய்தவும்
மலரவன் ஆசைப்படவும்..........."

— திருவாசகம்

எனவே, நன்மை தீமைகளைப் பகுத் துணர்ந்து, தீமையை நீக்கி நன்மையை அடையும் மக்களுலகில் முதலிடம் பெறுவன திருக்கோயில்களே என்பது சொல்லத் தேவை இல்லை.

'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா' 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பன நம்நாட்டு முதுமொழி கள். "திருக்கோயில், இல்லாத திருவிலூர்" என்பது அப்பர் பெருமான் திருமொழி.

ஆசாரியர்களின் அருள்மொழிப்படியே நம் தமிழ் வேந்தர்கள் திருக்கோயில்களையே முதன்மையாகக் கருதினர். தங்கள் அரண்மனைகளைவிடக் கோயில்களையே மிகச் சிறப்பாகவும், அழியாதனவாகவும் ஆக்கினர். தங்கள் வெற்றிச் சின்னங்களையும், கலை அழகுகளையும் அவர்கள் தங்கள் அரண்மனை முதலிய இடங்களில் கண்டு மகிழாமல் திருக்கோயில்களிலேயே கண்டு களித்தனர்.

முதல் இராசராச சோழன் தனது செல்வச் சிறப்பு, வெற்றிகளின் அறிகுறி, கலை ஆர்வம் முதலிய எல்லாவற்றின் கருவூலமாகவும் தஞ்சைப் பெருங்கோயிலை அமைத்து மகிழ்ந்தான்; அவன் மகன் கங்கைகொண்ட சோழன் தான் வடநாட்டு அரசர்களை வென்று பெற்ற வெற்றியின் நினைவாக அவ்வெற்றியில் பெற்ற பெயராலேயே கங்கைகொண்ட சோழேச்சரத்தைச் சிற்பக்கலையின் சீர்ததும்பக் கட்டினான். அவன் பெயரனாகிய மூன்றாம் குலோத்துங்கசோழனும் தான் வடநாடு சென்று பெற்ற வெற்றியால் கிடைத்த பொருள்களைக்கொண்டு திரிபுவன வீரேச்சுரமாகிய இத் திருபுவனத் திருக்கோயிலைச் சிற்பக் கலைக்குச் சிறந்த இலக்கியங்களாகக் கட்டினான். அம்மன்னனுக்குத் திரிபுவனச் சக்கரவர்த்தி என்ற பெயரும் இருத்தல் பற்றி, அப்பெயரால் இங்குள்ள இத்திருக்கோயிலை அமைத்தான். இம்மன்னர்களது திருப்பணிகளாலும் பிறவற்றாலும், ஆன்மீகத் துறையில் முதலிடம் வாய்ந்த நம் இந்திய நாட்டில் தமிழகம் திருக்கோயிலுக்குப் பெயர் பெற்று விளங்குகின்றது. இன்றைய அரசாங்கமும் தமிழ்நாட்டின் தனிப்பெருஞ் சின்னமாகத் திருக்கோயிலையே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நம் பழம்பெரும் பொருள்களாகிய திருக்கோயில்களை நாம் கண்டு பாராட்டுவது மட்டும் போதுவதன்று. அவைகளில் நித்திய நைமித்திக வழிபாடுகளும் திருவிழாக்களும் குறைவின்றி நடைபெறச் செய்யவேண்டும். கோயில்களில் நித்திய வழிபாடு முட்டின்றி நடைபெறுதல்தான் நமது

அன்றாட வாழ்க்கை செவ்வனே நடைபெறும். கோயில்களில் நைமித்திக விழாக்கள் சிறப்புற நிகழ்ந்தால்தான் நமது சிறப்பு நலங்கள் நம் உள்ளத்திற்கு நிறைவை அளிக்கும் வகையில் இனிது நிகழும். மேலும் கோயில்களின் அன்றாட வழிபாடும், சிறப்பு நிகழ்ச்சிகளும் தனிப்பட்டவர் நலத்திற்கு மட்டும் அன்று; நாட்டின் நலத்திற்கும், அமைதிக்கும், வெற்றிக்கும் அவைகளே மூல காரணங்களாய் அமைகின்றன.

திருக்கோயிலின் அமைப்பை உற்று நோக்கின் அது நமது உடம்பின் அமைப்பையே ஒத்திருப்பதைக்காணலாம். கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபம் என்னும் ஆறும் முறையே மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம் அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களாகும். இவ்வமைப்பு இத்திருக்கோயிலில் உள்ளது. மூன்று ஆவரணங்கள், தூல, சூக்கும, காரணங்கள் என்னும் மூன்று சரீரங்களாகவும், பஞ்ச ஆவரணங்கள் அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞான மயகோசம், ஆனந்தமய கோசம் என்னும் பஞ்ச கோசங்களாகவும், சப்தாவரணங்கள் சப்த தாதுக்களாகவும், சொல்லப்படும். கதவுகள் ஆணவம்; துவஜஸ்தம்பத்தில் உள்ள கயிறு கன்மம்; அதில் கட்டப்படும் இடபக் கொடியை ஏற்றியும் இறக்கியும் இறைவன் திருவிழாக் கொண்டருளுதல், உயிர்களை வினையின் வழி இயக்கி ஐந்தொழில் செய்து அவைகளை வீடுபேறு அடையச் செய்வதாகும்.

“ உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கே ”

என்னும் திருமந்திரத்தாலும்,

" காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனம்மணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே "

என்னும் அப்பர் தேவாரத்தாலும் திருக்கோயில்கள் நம் உடம்பின் அமைப்பையே பெற்றுள்ளமை விளங்கும். ஒவ்வோர், உயிருக்கும் ஒவ்வோர் உடம்பு உள்ளது. ஆனால், நாட்டின் உடம்பாகத் திருக்கோயில் இருக்க, அதனுள், நாட்டின் உயிராக இறைவன் இருக்கின்றான் என்பதே திருக்கோயிலின் உண்மை.

எனவே, இத்தகைய திருக்கோயில்களில் நைமித்திக வழிபாடுகள் சிறப்புற நடத்தல் நாட்டின் நலத்திற்கும், வெற்றிக்கும் இன்றியமையாததாகும். திருக்கோயிலில் இவைகள் செவ்வனே நடைபெறாது முட்டுப்படுமாயின் நாட்டின் நலம்கெடும்.

" முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடில்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றும் "

என்பது திருமந்திரம்.

இனி, திருக்கோயில்களில் நித்திய நைமித்திகங்கள் செவ்வனே நடைபெறச் செய்வதோடு அவை பழுதடையாமல் அவ்வப்பொழுது திருப்பணிகள் பல செய்தும், மூர்த்திகட்கு அஷ்டபந்தனம் சாத்தியும், கும்பாபிஷேகங்கள் செய்வித்தல் வேண்டும். அப்பொழுதுதான் கோயில்கள் புத்தம் புதியனவாய் இறைவன் திருவருட் பொலிவை உடையனவாகி விளங்கும். பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறையேனும் தவறாது கோயில்களில் மூர்த்திகளுக்கு மருந்துசாத்திக் கும்பாபிஷேகம் செய்வித்தல் வேண்டும் என்பது சிவாகம விதி.

கும்பாபிஷேகம் என்பது எல்லாவகையான குறைபாடுகளும் நீங்கி இறைவன் திருவருள் விளக்கம் மேம்பட்டுத்

தோன்றுமாறு செய்யும் பெருஞ் சாந்தியாகும். இது திருக் கோயில்களில் உரிய காலங்களில் நடத்தப்பெற வேண்டுவது இன்றியமையாதது. மகாகும்பாபிஷேகத்தைச் செய்விப்பவரும், தரிசித்தவரும் எல்லாவகையான குற்றங்களினும் நீங்கி இறைவன் திருவருளுக்குப் பாத்திரராவார்கள். இது பற்றியே ஞானசம்பந்தரும், எலும்பைப் பெண்ணாக்கி எழச் செய்த அற்புதத் திருப்பதிகத்தில்,

"கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரம்அமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்"

என்று அருளினர்.

யந்த்ர மந்த்ர உபாசனா மார்க்கங்களால், வேறு எங்கும் காணாத அற்புத தெய்வீக சக்தியை அனுபவத்தில் கண்டு களித்த நாடு நம் பாரதநாடு. அவ்வகையிலே நம் வேதாக மோக்த வைதிக சைவ நெறியில் மந்திர பூர்வமான உபாசனைகளால் இறைவனது அற்புத ஆற்றலைக் காணும் முறைகள் சிவாகமங்களிலே விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. அம் முறைகளில் சிவாலயங்களில் செய்யப்படும் மகாகும்பாபிஷேகம் மிகப் பெரியதொன்று. இதில் அமைந்துள்ள முறை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவ உண்மையை அடிப்படையாகக் கொண்டது.

தெய்வத் திருவுருவங்களை அப்படியே வைத்து வழிபடாமல் மந்திர ரூபமாக வைத்து வழிபடுவதாலேயே விசேட பலன் உண்டாவதாகும். அதற்குக் காரணம் மந்திரங்களிலே தெய்வ சாந்நித்தியம் மிகுந்திருப்பதே. ஆகவே, தெய்வ வழிபாட்டில் மந்திரம் முதன்மையானதாகவும், அதனை அடுத்து அதற்குரிய பாவனையும் கிரியையும் உடன் நிகழவேண்டுவனவாகவும், அவற்றால் வழிபடும் இடங்களைக் கும்பம் விம்பம் தம்பம் என மூன்றாகவும் வைதிக சமயங்கள் கூறும். மூன்று வகையில் கும்பத்தில் சிறப்பாக வழிபட்டு அதில் தெய்விக சக்தி விளங்கப் பெற்ற நீரை விம்ப தம்பங்களுக்கு அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாகும்.

இதன் முக்கிய அங்கம் இறைவனை யாகத்தில் வழிபடும் அக்கினிகாரியமாகும்.

ஆலயத்தின் அமைப்பைப் போலவே கும்பத்தின் அமைப்பும் பல தத்துவங்களை உடையது. கும்பம் சிவனது திருமேனியாகவும், அவனது அளவற்றசக்திகளின் சொரூப மாகவும், முப்பத்தாறு தத்துவங்களின் வடிவமாகவும், எல்லாத் தேவர்களின் சொரூபமாகவும், சர்வதீர்த்தங்களின் ரூபமாகவும் அமைகின்றது. யாகசாலையும், யாக குண்டங் கள் முதலியனவும், யாக அக்கினியும் அவ்வாறே பல தேவர் களின் சொரூபமாகவும், தேவதேவரான சிவபெருமானது அருள் வடிவமாகவும், மற்றும் பலவாறாகவும் அமைகின்றன. அவைகளைத் தக்கஆகம சீலர்களால் முறைப்படி அமைத்து. வேத சிவாகம அத்தியயனம், திருமுறைப் பாராயணம், சிவனடியார் தோத்திரங்கள் முதலியவற்றோடு செய்து கும்பத்திலுள்ள நீரை ஸ்தூலலிங்கமாகிய இராஜகோபுரத் திலும், கோயில் விமானத்தின் உச்சியிலும், சூக்குமலிங்க மாகிய மூலஸ்தான மூர்த்தியின்மேலும் அபிஷேகிப்பதால் தூய்மைபெற்று அவ்விடங்களில் சிவசாந்நித்தியம் மிகுந்து விளங்கி, உலகத்தின் பொருட்டாகவும், அவரவர்கள் பொருட்டாகவும் திருக்கோயிலில் செய்யப்படும் நித்திய நைமித்திக காமிய வழிபாடுகளுக்கு விசேட பலன்கள் சித்திக்கின்றன. அவைகளை அனுபவத்தில் உணர்ந்தே பெரிய அரசர் முதலான நம் முன்னோர்கள் கும்பாபிஷே கத்தை முதன்மையாகக் கருதிச் செய்துவந்தனர்; செய்தும் வருகின்றார்கள். இத்தகைய சிறந்த மகாகும்பாபிஷேகச் சிறப்பு இப்பொழுது இத் திருக்கோயிலில் வாய்த்துள்ளது.

இத் திருபுவனத் திருக்கோயில், 'திரிபுவனச் சக்கர வர்த்தி' என்னும் சிறப்புப் பெயருடைய மூன்றாம் குலோத் துங்கனால் (கி. பி. 1178—1218) எடுக்கப்பெற்றது என்பது முன்னமே குறிக்கப்பட்டது. இப்பேரரசனுடைய ஞானகுரு சித்தாந்த ரத்நாகர ஆசிரியர் ஸ்ரீ ஸ்கந்த சம்புவினுடைய

திருமகனுர் ஈஸ்வரசிவன் என்பவரால் சிவசாந்நித்திய ஆவாகனம் செய்யப்பெற்றது. இங்குத் தெய்வீகச் சிற்பக் கலை ஈடும் எடுப்பும் அற்ற முறையில் விளங்குவதை இதனை நேரில் காண்கின்ற அன்பர்களாகிய நீங்கள் நன்கு உணர்கின்றீர்கள். கலைக்கூடம் ஒன்றும் இத்திருக்கோயிலில் திறக்கப்படுகிறது. ஆகையால், அதுபற்றி நாம் மேலே ஒன்றும் சொல்லவேண்டுவது இல்லை.

இனி இங்குச் சிறப்பாக விளங்குபவர் சரபமூர்த்தி. இவரது பெருமை சரபோபநிஷதம் முதலியவற்றில் நன்கு விளக்கப்படுகின்றது. திருமால் நரசிங்க மூர்த்தியாய்த் தோன்றி இரணியனை அழித்த பொழுது அவனது உதிரத்தை முற்றிலும் குடித்த காரணத்தால் மதிமயங்கிச் செருக்குற்றுத் தாமே உலகத்தை அழிக்கத் தொடங்கினுர், தேவர்களும், பிரமதேவனும், திருமகளும், பிரகலாதனும் திருமாலைத் துதித்து இனிய முறையில் வேண்டிக்கொண்ட வேண்டுகோள்களும் அவரது செவியில் நுழைந்தில. அதனுல் அமரர் அனைவரும் சிவபிரானைச் சரணடைந்து வேண்டிக்கொள்ள 'சரபம்' என்னும் எண்காற்புள்ளின் வடிவங்கொண்டு சென்று நரசிங்கத்தை அழித்துத் திருமாலை முன்போலவே உலகைக் காப்பவராக ஆக்கினுர்.

அவ்வாறு செய்த அப்பெருமானே இத் திருத்தலத்தில் எழுந்தருளி யிருக்கின்றுர். தேவர் முதலியோர்க்கு நரசிங்கத்தினுல் உண்டாகிய கம்பத்தை (நடுக்கத்தை) நீக்கியருளின காரணம் பற்றியே இவர், 'கம்பஹரேசுரர்' (நடுக்கம் தவிர்த்த பெருமான்) என்னும் திருப்பெயரோடு விளங்குகிறுர். வரகுணனைப் பற்றியிருந்த பிரமஹத்தி திருவிடைமருதூரில் நீங்கியிருப்பினும் அதனுல் அவனுக்கு இருந்த நடுக்கத்தைப் இப்பெருமானே நீக்கியருளினுர். இதனுலும் இப்பெயர் பொருந்துவதாகிறது. சிவபிரான் காஞ்சிபுரத்தில் கம்பாநதியைப் பெருக்கெடுத்து வரச்செய்து உமாதேவிக்குக் கம்பத்தை (நடுக்கத்தை) உண்டாக்கிக் கம்பன் எனப்பெயர் பெற்றுன். இங்குத்

தேவர் முதலானவரது கம்பத்தை நீக்கி, கம்பஹரனாய் விளங்குகின்றான்; காஞ்சியில் இறைவன் உமாதேவிக்கு நடுக்கம் உண்டாக்கியதை, சுந்தரமூர்த்திசுவாமிகள்,

" எள்க லின்றி இமையவர் கோனை
ஈசனை வழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிப டச்சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி
வெருவி யோடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக்கண் அடியேன் பெற்ற வாறே "

என்று பாடியருளுகின்றார்கள்.

சிவபிரானுக்குப் போக வடிவம், யோக வடிவம், வேக வடிவம் என்னும் மூவகை வடிவங்களில் சரபமூர்த்தம் வேக வடிவம். வேக வடிவங்கள் எல்லாம் உயிர்களது துன்பத்தையும் பகையையும் போக்கி, இன்பத்தையும் வெற்றியையும் அளிப்பன ஆதலின், சரப வடிவமும் அத்தகையதே. இது துன்பத்தை நீக்கவல்லது என்பதை,

" சிம்புளாய் மடங்கல் எறுழ்வலி கவர்ந்த
திறலும்முப் புரஞ்சுடு விறலும்
அம்புயா தனத்தன் முடிகளைந் திட்ட
அடலும்ஏத் தினர்க்கிட ருளதோ "

என்ற சோணசைலமாலைச் செய்யுளாலும் அறியலாம்.

சரபோபநிஷதத்தில் சரபரைப் பற்றிய தோத்திரங்கள் உள்ளன. மற்றும் இவருக்குரிய யந்த்ர மந்த்ரங்களும் உள்ளன. அவைகளின் வழியே சரபரை உபாசித்து பற்பல பயன்களைப் பெற்றுவருதல் அனுபவ மானது.

இச் சரபமூர்த்தியின், கம்பஹரேசுரரின் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழாவில் இப் பன்னிரு திருமுறை

மாநாடு நடைபெற வேண்டுவது மிக மிக இன்றியமையாத தாகும். சிவபெருமானது போக வடிவம். யோக வடிவம், வேக வடிவங்களைப் பற்றியும், அவைகளால் அடையும் பயன்களைப் பற்றியும் நமக்கு நன்கு விளக்குகின்ற நூல்கள் பன்னிரு திருமுறைகளைவிட வேறு எவ்வ இருக்கின்றன?

திருமுறைகளைத் தில்லைச்சிற்றம்பலத்திலிருந்து வெளிப் படுத்தியவன் ஒரு சோழமன்னன். அவனுக்குத் திருமுறை கண்ட சோழன் என்ற சிறப்புப் பெயரும் இதனால் ஏற்பட் டது. அம்மன்னன் வேண்டுகோளின்படித் திருமுறைகளை அடைவுசெய்தருளியவர் நம்பியாண்டார் நம்பிகள். மூவர் பாடிய தேவாரத் திருமுறைகள் சப்தகோடி மகாமந்திரங் களாக விளங்குதலின் இவற்றை முதல் ஏழு திருமுறை களாகவும் ஏகாதச மந்திரங்களாக ஏனைய திருமுறைகள் விளங்குதலின் அவற்றைப் பின்னுள்ள நான்கு திருமுறை களாகவும் வகுத்தருளினர் என்று திருமுறை கண்ட புராணம் கூறுகிறது.

" மந்திரங்கள் எழுகோடி ஆதலினல் மன்னுமவர்
இந்தவகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினல்
அந்தமுறை நான்கினெடு முறைபதினென் ருக்கினர்."

இத் திருமுறைகளைக் கேட்பதிலேயே சிவபிரானுக்கு விருப்பம் மிகுதி, அவ்விருப்பத்தினலேயே அவன் தொடி யுலாம் முன்கைமட மாதர்பால் தூது செல்லல், மண் சுமந்து கூலி கொண்டு பிரம்படி படுதல் முதலியவற்றைச் செய்தான். அவனது திருவருள் ஆற்றலால் பற்பல அரிய அற்புதச் செயல்களை உலகில் விளைத்தனவும் திருமுறைகளே. இத் திருமுறைகளின் சிறப்பை,

" அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடும்
அதுபோல்அன்று இது என்றும் உளதாம் உண்மைப்
பரபதமும் தற்பரமும் பரனே யன்றிப்
பலரில்லை என்றெழுதும் பனுவல் பாரில்

எரியிடை வேவாது ஆற்று எதிரேயோடும்
என்புக்கும் உயிர்கொடுக்கும் இடும்நஞ் சாற்றும்
கரியை வளைவிக்குங்கல் மிதக்கப் பண்ணும்
கராமதலை கரையிலுறக் காற்றுங்காணே"

என விளக்குகின்றது திருமுறைகண்ட புராணம்.

இத்திருக்கோயிலின் மகாகும்பாபிஷேகக் காட்சியும், வேத சிவாகம அத்தியயனங்களோடு திருமுறை மாநாடு, திருமுறைப் பாராயணம் இவற்றின் கேள்வியும் அன்பர்களுக்குக் கண் பெற்ற பயனாகவும், செவி பெற்ற பயனாகவும் அமைகின்றன. இச்சிவபுண்ணிய நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு அன்பர்கள் இருமைப்பயனும் பெற்று இன்புறுவார்களாக

---

## ஸ்ரீலஸ்ரீ அழகியதிருச்சிற்றம்பல தேசிக சுவாமிகள்

திருமுறை இன்னிசைவாணர். வேளூர். க. சொக்கலிங்கம்.

இராகம் - சாருகேசி ] [ தாளம் - ஆதி

பல்லவி

சேவித்திடுவோமே — அழகிய
திருச்சிற்றம் பலவன் திருவடியை நாமே (சேவி)

அனுபல்லவி

காவிரித் தென்கரை மேவிய தருமையில்
காட்சிதந்தே அருள் ஆட்சிசெய் வானைச் (சேவி)

சரணம்

பாண்டிநன் னாட்டுப்பதி பலவும் பணிந்துசிதம்
பரனார்செய் பூசை பரிவுடன் ஏற்றருளி
ஆண்டினிலே முதுமை அடைந்துவந்த மடந்தை
அவளுக்கே பரிகலத்தால் ஆண்மக வளித்தானைச் (சேவி

எக்காலமும் மதுரைச் சொக்கலிங்கப் பெருமான்
இணையடியே நமக்குத் துணையென் றிருப்பானை
பக்குவத்தா லுயர்ந்த நாவுக் கரசருக்கே
பரஞான தீக்கைசெய்து பாரிற்புகழ் கொண்டானைச் (சேவி)

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,

**வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.**

( மலர் 22, இதழ் 9, பக்கம் 461இன் தொடர்ச்சி )

## நால்வகை நெறி

மாணாக்கன் : உயிர் மும்மலங்களின் நீங்கி இன்புறுதற்கு மேற்கொள்ள வேண்டிய சாதனங்கள் சரியை கிரியை யோகம் என்று அருளினீர்கள்; அச்சரியை முதலாகக் கூறப்படுவன யாவை என்பதை அறிவித்தருளல் வேண்டும்.

## சரியை

ஆசிரியர் : சரியை முதலாகச் சொல்லப்படும் நான்கும் சிவபிரானுக்குச் செய்யும் வழிபாட்டு வகைகளேயாகும்.

உருவம் அற்றவனாகிய இறைவன், தன்னை உயிர்கள் கண்டு வழிபடுதற்பொருட்டு, 'உருவம், அருவுருவம், அருவம்' என்னும் மூவகைத் திருமேனிகளைக் கொள்ளுகின்றான். அவற்றுள், 'உருவத்திருமேனி' எனப்படுவன, 'முகம், கை, கால்' முதலிய உறுப்புக்கள் யாவும் தோன்ற, 'ஆடை ஆணிகள் படைக்கலம்' முதலியவற்றோடும் இனிது விளங்கும் திருமேனிகள். அவை, 'கூத்தப்பெருமான் ( நடராசர் ), மனைமகவுடையார் ( சோமாஸ்கந்தர் ), பிறைசூடியார் ( சந்திரசேகரர் ), பிச்சைப்பிரான் ( பிட்சாடனர் )' முதலிய பெயர்களால் குறிக்கப்படும் திருவுருவங்கள். இன்னும், சிவநெறியை அறிவிக்கும் உரிமை உடைய ஆசிரியர்களும், சிவனடியார்களும் சிவபிரானது உருவத் திருமேனிகளே. இவ்வுருவத் திருமேனிகளில் இறைவனை நினைந்து வாழ்த்தலும், வணங்கலும், வேண்டும் பணிகளைச் செய்தலும் ஆகிய புறவழிபாடுகளே 'சரியை' எனப்படும்.

ஆகவே, திருக்கோயிலுக்குச் சென்று திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், திருநந்தனவனம் வைத்தல், பூப்பறித்துக் கொடுத்தல், மாலை தொடுத்துக் கொடுத்தல், திருப்பாடல்களைப் பண்ணோடு பாடிப் போற்றுதல், திருமுறைகளை

நாள்தோறும் கட்டளையாக ஓதுதல், சிவநெறி ஆசிரியர்களுக்கு வேண்டுவன செய்தல், சிவனடியார்களை அன்போடு வணங்கி உணவு முதலியன அளித்து வழிபடுதல் இவை போல்வன வெல்லாம் சரியை என்பது விளங்கும்.

## கிரியை

இறைவன் கொள்ளும் மூவகைத் திருமேனிகளில் இலிங்கத் திருமேனி, அருவுருவத் திருமேனியாகும். அது, முகம், கை, கால் உறுப்புக்கள் இன்மையால் அருவமாகியும், பிழம்பு உண்மை யால் உருவமாகியும் இருநிலையும் உடையதாய், 'அருவுருவத் திருமேனி' எனப்படுகின்றது. இவ்விலிங்கத் திருமேனியைச் சிவ நெறி ஆசிரியர்கள் எழுந்தருளுவித்துக் கொடுக்கப்பெற்று, அதில் சிவபெருமானை நினைந்து வழிபடும் முறையை அவர்கள் பால் உணர்ந்து வழிபாட்டிற்கு வேண்டிய திருமஞ்சனப் பொருள்கள், பூக்கள், பச்சிலைகள், நறும்புகைப் பொருள்கள், திருவிளக்கு, படையல்கள் முதலியவற்றைத் திரட்டிக்கொண்டு, நீராடி நாட்கடன் முடித்து, தக்கதோர் இடத்தில் அமைதியாய் அமர்ந்து, 'பூதசுத்தி, தான்சுத்தி, திரவிய சுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி' என்னும் ஐந்து சுத்திகளைச்செய்து, சிவபிரானை அருவுருவத் திருமேனியில் ஆவாகனம் தாபனம் முதலியவற்றால் அகத்திலும் புறத்திலும் வழிபடுதல் 'கிரியை எனப்படும். எனவே, அகவழிபாடும் புறவழிபாடும் ஒருங்கு அமைவது கிரியை என்பது விளங்கும். வேள்வித்தீயில் இறைவனை வழி படுவதும் கிரியையேயாகும்.

## யோகம்

புறக் காட்சிக்குப் புலனாகாது அகக் காட்சியில் தோன்றும் ஒளிவடிவமும் இறைவனுக்கு உண்டு. அதுவே அருவத் திரு மேனி எனப்படும். அவ்வருவத் திருமேனியைக் காணும் முறை யில் சென்று கண்டு அதில் அழுந்தி ஒன்றுபடுதலே, 'யோகம்' எனப்படுவது.

இதன்கண் எட்டுப் படிநிலைகள் உண்டு. அவை, 'இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி' என்பன. பாவம் செய்யாமையும் துறவொழுக் கத்திற்கு மாறானவற்றைச் சிறிதும் பற்றாது விடுதலும் இயமம். துறவொழுக்கத்தை மேற்கொண்டு அதில் தப்பாது நிற்றல் நியமம். பதுமம், கூர்மம், மச்சம் முதலாகப் பெயர்பெற்ற

ஆசனங்களில் பழகுதல் ஆசனம். மூச்சுக் காற்றினை வெளி விடுதல் (இரேசகம்), உள் வாங்குதல் (பூரகம்) இவைகளை முறை யறிந்து அவைகளை ஓர் ஒழுங்குக்கு உட்படச் செய்து, மூச்சினை வெளிச்செல்லாது உள்ளே நிறுத்துதல் (கும்பகம்) செய்தலைச் சிறிது சிறிதாகப் பழகி, அதனை வலநாடி இடைநாடிகளிற் செல்லாமல் தடுத்து, நடுநாடியாகிய சுழுமுனை நாடியிற் செலுத்து தல் பிராணாயாமம். இப் பிராணாயாம முறையால் மனத்தைப் பொறிகளின் வழி ஓடாது, அடக்குதல் பிரத்தியாகாரம். அம் மனத்தைக் குறித்த பொருளில் நிறுத்தும் வன்மை தாரணை. அவ்வாற்றால் இறைவனது ஒளிவடிவாகிய அருவத்திருமேனி யிலே மனத்தை இருத்துதல் தியானம். அந்தத் தியானத்திலே தன்னை மறந்து அழுந்தியிருத்தல் சமாதி. எனவே, அகவழிபாடு ஒன்றினாலே இறைவனது அருவத்திருமேனி பற்றிச் செய்யப் படும் வழிபாடே யோகம் என்பது விளங்கும்

## ஞானம்

சரியை கிரியை யோகங்களில் பழகப் பழக புறக்காட்சியாகிய உலகப் பயிற்சியில் பற்று நீங்கி, அகக் காட்சியாகிய இறைவன் திருமேனி வழிபாட்டில் பற்று வளரும். அது வளர வளர உடம்பையே தான் என மயங்கியிருக்கும் நிலை நீங்கித் தன்னை உடம்பின் வேறாக உணரும் உணர்ச்சியும், தன் உணர்ச்சிக் கெல்லாம் அடிநிலையாக உயிர்க்கு உயிராய் உள்ள இறைவ னது திருவருள் உணர்ச்சியும் வளரும். அது வளர்ந்து நிறை யும் பொழுது இறைவன் குருவாய்த் தோன்றி, "நீ ஐம்பொறி முதலிய தத்துவக்கூட்டங்கள் அல்லை; அவற்றின் தன்மை வேறு; உன் தன்மை வேறு' என்று உணர்த்தியருளுவான். அவ் வுண்மை யுரையைக் கேட்டபொழுது அதனை அங்ஙனம் ஐயம் திரிபின்றி உணரும் உணர்வு உண்டாகும். அவ்வாறு உணர் தலே, 'ஞானம்' எனப்படும்.

ஆசான் மூர்த்தி அருளிச் செய்வதைக் கேட்டல் கேள்வி ஞானம். பின்னர், அதனை நூல்களாலும் பொருந்துமாற்றாலும் ஆராய்ந்து உணர்வது சிந்தனை ஞானம். ஆராய்ந்தபின் அதனைத் தெளிந்துகொள்வது தெளிவு ஞானம். தெளிந்த பின் னர் ஐம்பொறிகளில் செல்லாது உயிர்க்குயிராகிய இறைவனிடத் திலே அழுந்தி நிற்றல் நிட்டைஞானம். ஞானம், இங்ஙனம், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல்' என நான்கு வகைப்படும். ஆசான் மூர்த்தியின் அருளுரையினைச் சிந்திக்கும்

பொழுதுதான், 'பதி, பசு, பாசம்' என்னும் முப் பொருள்களின் இயல்பு சாத்திரங்களைக் கொண்டு உணரப்படும். அவ்வாறு சிந்தனை ஞானத்தை அடைய விரும்புபவர்களுக்காகவே உண்மையில் ஞான நூல்கள் உள்ளன. அந்த ஞான நூல்களை ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தல், கேட்டல், சிந்தித்தல், ஆகியவைகள் 'ஞானபூசை' எனப்படும். எனவே, 'உருவம், அருவுருவம் அருவம்' என்னும் மூன்றையும் கடந்து அறிவே வடிவாய் விளங்கும் இறைவனது உண்மை இயல்பை அறிந்து அன்பு செய்யும் அறிவு வழிபாடே ஞானம் என்பது விளங்கும்.

சரியை முதலிய நான்கும் முறையே தாசமார்க்கம் (தொண்டு நெறி), சற்புத்திர மார்க்கம் (மகன்மை நெறி), சக மார்க்கம் (தோழமை நெறி), சன்மார்க்கம் (நன்னெறி) எனப்படும்.

இவ்வாறு சரியை முதலியவற்றின் இயல்பை ஒருவாறு அறிந்துகொள்க.

(தொடரும்)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

I have had the good fortune of visiting the famous temple of Vaithiswarar and Selvamuthukumaraswamy. That I had immensely benefitted by the visit, I can say without any contradiction. The up-keep and way of worship is an example for other temples in India and I heartily and gratefully congradulate the Dharmapuram Adhinam.

(Sd.) A. Parameswaran,

7—7—63. Officer on Special Duty, P & T Directorate,

New Delhi.

தருமையாதீனம்,
திருபுவனம், ஸ்ரீ கம்பஹரேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில்



ஸ்ரீ சரபமூர்த்தி

தருமையாதீனம் ஆவணிமூல விழாவில்,
ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள்



சென்னை, திரு. ச. சிவகுமாரன் M. A., அவர்களுக்குப்
" பைந்தமிழ்ச்செல்வர் "
என்னும் பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தி
ஆசியருளல்.

திருத்தருமையாதீனம்

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின்

# ஆசியுரை *

ஆலந்தரித்த லிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்த லிங்கம் - பாலொளியாம்
மத்தனே கூடல் மதுராபுரி உமையாள்
அத்தனே ஆலவா யா.

சத்தி யாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

அன்பர்களே, இன்று ஆவணி மூலத் திருநாள். செந்தமிழ்ச் சொக்கர் அடியார்களின் அன்பின் பெருமையை அனைத்துலகும் அறியுமாறு திருவிளையாடல் புரிந்த திருநாள். இந்தநன்னாள் திருவிளையாடற் புராணத் திருநாளாகவே அமைந்துள்ளமை பெருஞ் சிறப்பாகும். சோம சூரிய அக்னியாகிய முக்கண்களை உடைய நம் சிவபெருமான் திருவருளால் நமக்குக் கிடைத்துள்ள முப்பெரும் புராணங்கள் திருவிளையாடற் புராணம், திருத்தொண்டர்புராணம், கந்தபுராணம் என்பன. இவற்றுள் சோமன் திருவிளையாடல், சூரியன் திருத்தொண்டர் புராணம், அக்னி கந்தபுராணம். இன்று திருவிளையாடற் புராணத்தைச் சிந்திக்கும் திருநாள். "நன்பாட்டுப்புலவனாய்ச் சங்கம்ஏறி நற்கனகக்கிழி தருமிக்கு அருளினோன்காண்" என்று அப்பர் சுவாமிகள் அருளியபடி இறைவனே உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளிவந்து பொற்கிழிவழங்கிய புண்ணியமூர்த்தியாகஉள்ளான். அவ்வருளாணைப்படியே இவ்வாதீனத்திலும் ஒவ்வொரு ஆவணி மூலத்தும் புலவர்க்குப் பொற்கிழிவழங்கிப் பாராட்டும் வழக்கப்படி

---

* திருத்தருமையாதீனம் ஆவணிமூல விழாவில் (29—8—63) ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் சென்னை திரு. ச. சிவகுமாரன் எம். ஏ., அவர்களுக்குப் "பைந்தமிழ்ச் செல்வர்" என்ற பட்டம் வழங்கி அருளிய ஆசியுரை.

இவ்வாண்டிற் பட்டம் பெறுவோர் நம் அன்பர் திரு. ச. சிவ குமாரன் ஆவார். இவரைப் பைந்தமிழ்ச் செல்வராக்குகின்றது செந்தமிழ்ச் சொக்கர் திருவருள். நம் சிவகுமாரன் அவர்கள் பழுத்த அன்பும் சைவப்பற்றும் உடைய முதுபெருந்தொண்டர் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் திருமகனர். சச்சி தானந்தத்தின் விளைவு சிவகுமாரர்தானே. தாம் ஏற்றிருக்கும் தொழிலால் வேறு நிலையில் நின்ருலும் தொண்டு நிலையில் சங்கரன்தாள் மறவாத நல்லன்பர் இவர். இனிய பேச்சாளர். அன்பு கனியக் கனிய திருமுறைகளைப்பாடும் இயல்பும், அனை வரையும் அதில் ஈடுபடுத்தும் ஏற்றமும் இயல்பிலேயே வாய்ந் தவர். சைவத்தொண்டு புரிவதில் ஊக்கமும், உறைப்பும், உடையவர். குருபீடங்களிடத்தும் அடியார்களிடத்தும் ஆழ்ந்த பக்தி உடையவர். இந்த நல்லியல்புகள் இவரைச் சொக்கநாதர் திருவருளுக்கும் குருவருளுக்கும் ஆற்றுப்படுத்தியுள்ளன.

இனி, திருவிளையாடற் புராணத்தில் நாம் சில சிந்திப்போ மாக. இப்புராணம் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருநிதி. சைவத்திருமுறைகள், சாத்திரங்கள், உலகநீதிகள், விலங்குநூல்' நவமணி இலக்கணங்கள் முதலிய கருத்து நுட்பங்களுடன் விளங்கும் பக்திப் பெருநூல். புத்தி, சித்தி. முத்தி கருதிச் சைவப் பெருமக்களால் பாராயணம் செய்யப்பட்டுவரும் பெருநூல். பெரியபுராணத்தைப்போலவே கயிறுசாத்தி உண்மைகாணும் பெருவழக்குடைய ஞானநூல். பாண்டியநாட்டின் சரித்திரத்தை முறையாக அறிய உதவும் வரலாற்றுப் பெருநூலாகவும் உள்ளது,

திருவிளையாடற் புராண வரலாற்றைப் பல ஆசிரியர்கள் பாடி உள்ளனர். பரஞ்சோதிமுனிவர், வேம்பத்தூரார், அனதாரி யப்பர், வீமநாத பண்டிதர் முதலிய பலரும் தமிழில் பாடி இருக்கிருர்கள். வடமொழியிலும் இதனை ஹாலாஸ்ய மகாத்மியம் என்ற நூலாகக் காணலாம். இவற்றுள் பெருவழக்காக இன்று நாட்டில் நிலவிவருவதும், பாராயணம் பூஜை முதலியவற்றிற் குரியதும் பரஞ்சோதியார் இயற்றிய நூலே.

பரஞ்சோதி முனிவர் பக்தி நயம் சொட்டச் சொட்ட இந் நூலைப் பாடிஅருளியுள்ளார். திருமறைக்காட்டில் பிறந்த சகல கலைகளும் பயின்ற இந்த வித்தகர் மதுரையில் சற்குருநாதரைப் பெற்ருர். அங்கேயே ஞானுேபதேசம் பெற்று ஸ்ரீ சொக்கநாதர் மீனுட்சியம்மை தரிசனம் செய்து வீற்றிருந்தார். அக்காலத்து

மதுரை நகரப் பெருமக்கள் அனைவரும் வந்து வடமொழி ஹாலாஸ்ய மகாத்மியத்தை அனைவரும் உணரத் தமிழில் பாடித் தருதல்வேண்டும் என வேண்டிக்கொண்டனர். கனவிலும் அங்கயற்கண்ணியம்மைதோன்றிப் பெருமான்திருவிளையாடலைப் பாடவேண்டுமென்று பணித்தனர். அம்மையின் பேரருளைச் சிந்தித்து இறைவன் திருவிளையாடலைப் பாடத் தொடங்கும் தொடக்கத்திலேயே சத்தியாய் என்று எடுத்துப்பாடி அருளினர். 64 திருவிளையாடல்களையும் மதுரைக்காண்டம், கூடற்காண்டம்' திருவாலவாய்க்காண்டம் என்ற மூன்று காண்டங்களாகவகுத்து' மூவாயிரத்து முந்நூற்று அறுபத்துமூன்று செய்யுட்களால் முடித் தருளினர்.

திருவிளையாடற் புராணத்தை ஓதுவதால் நன்மைகள் பல உண்டாகும். சங்கநிதி பதுமநிதி இரு செல்வங்களையும் எளிதாகப் பெறலாம். மகப்பேறற்றோர் மகப்பெறுவர்; பகையை வெல்வர்; திருமணம் எய்தப்பெறுவர்; பிணிகள் நீங்கும்; ஆயுள் பெருகும். முடிவாக சிவன் திருவடிப்பேறு எய்தலாம் என்கின் றது நூற்பயன் கூறும் திருப்பாடல்.

இறைவன் திருவிளையாட்டினை எடுத்துப் புகழாதவர் யார். "ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் - உய்வார்கள் உய்யும்வகையெல்லாம் உய்ந்து ஒழிந்தோம்"என்றும், "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி"என்றும் மணிவாசகப்பெருமான் பாடுகின்றார். கம்பநாடரும்"உலகம்யாவையும் தாமுளவாக்கலும், நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா - அலகிலா விளையாட்டு" என்றுகூறிப் புகழ்ந்தார். பூவும் மணமும் போல இன்பமும் தானு மாய் இருக்கும் இன்பக்கடவுள் பரசிவம். அவன் அருளாணையைத் தாங்கி அயன், அரி, அரன் என்னும் மூன்று அண்ணல்களும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் செய்வர். அங்ஙனம் அவர்கள் அம்முத் தொழில்களையும் தன் சந்நிதியில் நின்று செய்துவரத் தான் அசைவின்றி இயக்கமின்றி முயற்சியின்றி இருந்து இத் திருவிளையாடலைச் செய்தருளுவான் அப்பெருமான். அத் திருவிளையாடல்களினால் உயிர்கள் வினைகளாகிய பகைகளை வென்று வீடுபெறுதல் வேண்டும் என்று திருவிளையாடல் நோக்கத்தை அருளுகின்றார் இவ்வருளாசிரியர். அவ்வழகிய திருப்பாடல் திருவிளையாடற் புராணத்தின் கருத்துரையாக இருப்பதாகும். சைவப்பெருமக்கள் தம் பாராயணத்தில் கொண்டு ஓதிப் பயன் பெறும் அப்பாடல் பின்வருமாறு:

பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப்போத இன்பம்
ஆவண்ண மெய்கொண்டவன்றன் வலிஆணை தாங்கி
மூவண்ணல் தன்சந்நிதி முத்தொழில் செய்ய வாளா
மேவண்ணல் அன்னான் விளையாட்டின் வினையை வெல்வாம்.

இறைவன் அணுவுக்கணுவாகவும், அண்டங்களுக்கு அண்டங்களாகவும் இருப்பவன். சிறியதினும் சிறியதாய், பெரியதினும் பெரியதாய் இருக்கும் அவ்விறைவனை அணோரணியான் மகதோமகீயான் என்று சுருதி புகழ்பாடும். இவ்விறைவன் அண்டங்களின் உள்ளும் புறம்புமாய் இருந்து சர்வ சாட்சியாய் விளங்கும் கடவுள். அப்பெருங் கடவுளுக்குத் துணை அண்டங்களையெல்லாம் ஈன்றவளாகிய பராசக்தியென்று பாடுகின்றார் பரஞ்சோதியார்.

அண்டங்க ளெல்லாம் அணுவாக அணுக்க ளெல்லாம்
அண்டங்க ளாகப் பெரிதாய்ச் சிறிதாயி னானும்
அண்டங்க ளுள்ளும் புறம்பும் கரியா யினானும்
அண்டங்கள் ஈன்றாள் துணை என்பர் அறிந்த நல்லோர்.

மணிவாசகரும், "சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் திருப்பெருந்துறைஉறை சிவனே" என்று பாடி அருள்வர்.

அண்டமோர் அணுவாம் பெருமைகொண்டு அணுவோர்
அண்டமாம் சிறுமைகொண்டு அடியேன்
உண்டஊண் உனக்காம் வகையென துள்ளம்
உள்கலந் தெழுபரஞ் சோதி
கொண்டநாண் பாம்பாம் பெருவரை வில்லில்
குறுகலர் புரங்கள்மூன் றெரித்த
கண்டனே நீல கண்டனே கங்கை
கொண்டசோளேச்சரத் தானே.

என்பது கருவூர்த்தேவர் திருவாக்கு,

தில்லையில் ஆடும் நடராஜப்பெருமான் தென்திசை நோக்கி ஆடுவது இரண்டுகாரணங்களுக்காக என்கிறார் ஆசிரியர். ஆடலின் இளைப்புத் தீர்வதற்காகப் பாண்டியநாட்டுச் சந்தனச் சோலைக்காற்று திருமுகத்தில் படவேண்டுமாம். அத்துடன் சங்கத்தமிழைத் திருச்செவி நுகர்தல் வேண்டுமாம். இவ்விரு

காரணங்களுக்காகவே தெற்குநோக்கித் திருமுகம் காட்டி ஆடுகின்ருர் என்று கூறுகிருர் ஆசிரியர். பாட்டு அற்புதமாக அமைந்திருக்கின்றது. படிக்கப்படிக்க இன்பம்; கேட்கக்கேட்க இன்பம்.

கடுக்கவின்பெறு கண்டனும் தென்திசை நோக்கி
அடுக்க வந்துவந்து ஆடுவான் ஆடலின் இளைப்பு
விடுக்க ஆரமென் கால்திரு முகத்திடை வீசி
மடுக்க வும்தமிழ்திருச்செவி மாந்தவும் அன்ருே.

தமிழ்மொழியாகிய மடமகட்கு நடனசாலையாக இருப்பது வழுதி நாடேயாகும் என்னும்போதே ஆசிரியர் தெய்வத் தமிழினிடத்து வைத்துள்ள பக்தி கிளர்ந்து எழுகின்றது. உணர்ச்சியில் விளைந்த அப்பாடல்கள் தெய்வத்தமிழ் மாட்சியை வியந்து போற்றும் வித்தகப்பாடல்கள்:

கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தஇப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ.

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் எலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்,

திருவிளையாடற் புராணத்தை எண்ணும்போதெல்லாம் இவ்விரு திருப்பாடல்களை எண்ணுமலிருக்க முடியாது. தமிழின் பெருமையை விளக்கும் இவை சொல்லும்தொறும் சொல்லும் தொறும் கம்பீரமுடைய கவிச் சிறப்புடையவை.

இறைவன் உயிர்களை இரண்டு வகைகளில் கருணைகாட்டி ஆட்கொள்ளுகின்ருன், ஒன்று அறச்சார்புடையது; மற்ருென்று மறச்சார்புடையது. இதனையே அறக்கருணை மறக்கருணை என்பர் மேலோர். இவ்வாறு மறங்காட்டுவதும் உயிர்களை வருத்துவதற்கன்று, உய்விப்பதற்கே. "அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை" என்பது நாயனர் நன்மொழி. சாத்திரத்திலும் குருநாதன் நம்மை வாட்டுவது கொல்லவல்ல பொல்லாக் குணம்போக்க என்று தெளிவுறுத்தக்காண்கின்ருேம். இவ்வாறு மறங்காட்டுவது அப்பேரருள் வள்ளலுக்குச் சிறிதாய்த் தோன்றினும், சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய

உயிர்களுக்கு மிகப்பெரிதாய்த் தோன்றுகின்றது. அத்துன்பமோ அவ் வள்ளலின் கருணையால் பேரின்பமாகவே முடிகின்றது. இவ்வாறே மதுரை மாநகரத்துக்கும் அரிமர்த்தனன் ஆட்சியில், மாணிக்கவாசகப் பெருமான் காலத்தில் ஒரு துன்பம் வந்தது. அதுவும் அவனுக்குத் திருவிளையாட்டே, ஆனால் நாடே கலங்கிற்று, மக்கள் கலங்கினர், மன்னனும் கலங்கினன். எல்லோரும் வெள்ள வடிவாக வந்த அத்துன்பத்தைத் தம் முயற்சியினால் மாற்ற முயன்றனர். அவனன்றி அணுவும் அசையாதல்லவா, பெருமான் இந்த வெள்ளத்துன்பத்தினால் உலகத்துக்குப் படிப்பினை காட்டத்திருவுளங்கொண்டான். அன்பின் பிழம்பாக விளங்கிய இரண்டு அடியவர்களின் பேரன்பை உலகத்துக்கு எடுத்துக்காட்ட எண்ணினான். மதியமைச்சராக விளங்கிய மாணிக்கவாசகப் பெருமான் ஒருவர். பிட்டுவிற்றுண்டு வாழும் நரை மூதாட்டியாகிய வந்தி மற்றொருத்தி, மாணிக்கவாசகர் முன்னேயே குருந்த மரத்தடியில் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றமை ஓரளவு உலகு அறியும். ஆனால் வந்தியோ உலகக் கண்ணோட்டத்துக்கு அப்பாற்பட்ட மதுரை மாநகரில் ஒரு சிறு மூலையில் மௌன பக்தி செய்துவந்த மூதாட்டி. படைப் பெருக்கத்திற்கு என்றிருந்த பாண்டியன் பொருளை நல்வழியில் மாற்றி அருட்பெருக்கத்திற்கு ஆலயப் பணியில் ஈடுபடுத்தினார் மணிவாசகர். எளிய நிலையில் பிட்டுவிற்று அதனால் வாழ்ந்திருந்த இம்மூதாட்டியோ அதனையும் இறைவனுக்கு அர்ப்பணித்து அப் பிரசாதத்தை அனைவருக்கும் வழங்கி மௌனத்தொண்டு புரிந்து மகிழ்ந்தாள். இந்த இரண்டு உயர் செயல்களின் உள்ளுறை நோக்கத்தை உலகு உணரச் செய்யத் திருவுளங் கொண்ட இறைவன் ஒரே நிலையில் இரண்டு நற்பலன்களையும் உண்டாக்கினான். தந்தைதாய் இல்லாத தனிக்கடவுளாகிய அவன் தனக்கு ஒரு தாயாக வந்தியைக் கொண்டான். தாய் தரும் அன்புகுழைந்த உணவாக அவள் தந்த பிட்டினைக்கொண்டான். அனைவருக்கும் அந்த இன்பத்தை வாரியும் வழங்கினான். அவ்வாறே தன்னடியார் படுதுயரானவற்றையும் தன்மையை வெள்ளமாக்கிப் பெருக்கினான். இதனால் இந்த அடியவர்களின் பரிபூரண அன்பை உலகு உணர்ந்தது; மன்னன் அறிந்தான்; நாடு நன்னெறிப்பட்டது. இதுவே மண்சுமந்த படலம் காட்டும் மாண்பொருள், ஆவணி மூலம் காட்டும் அரும்பொருள்,

திருவிளையாடல் புராணம் பற்றிய இத்த ஆய்வுரையின் நிறைவாக இதனையே நாம் உள்ளத்தில் கொள்ளவேண்டும்.

இவ்வாறே ஏனைய நம் சைவ புராணங்களையும் கற்றுணர்தல் வேண்டும். இவற்றை அருளிய ஆசாரியப் பெருமக்கள் திருவடிகளை இடையறுது சிந்தித்தால், சிவஞானமும் சிவகதியும் சித்திக்கும்.

வாழ்க உலகெலாம்.

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உலக மெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Korukkai Sri Veerateswara Swami Devasthanam.

Visited the temple today. For neatness and maintenance oneword will surprice ie. this is managed by Dharmapuram Mutt. Nothing more need be stated. The Archakar is well versed and is capable of crystal clear elucidation of the significance of the Kshetram. The members of the staff under the able guidance of the superindentant Sri Ramachandran are sincere and courteous. Devotion to the Lord in any man must come from within. But its manifesation is accelerated by forces from outside. This agency is in abundance in all places administated by the Dharmapuram Mutt. It is so in Korukkai also.

(Sd.) S. Rajagopalan,
Tahsildar, Mayuram.
28—8—63.

ஆவணிமூலத் திருநாள் பட்டமளிப்பு விழாவில்

“பைந்தமிழ்ச்செல்வர்” என்னும் பட்டம்பெற்ற

சென்னை,

## திரு. ச. சிவகுமாரன் எம். ஏ., அவர்கள்

ஆற்றிய

# உரைச் சுருக்கம்

இங்கு எழுந்தருளி அருளாட்சி செய்துவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடிகளை வணங்குகிறேன்! இன்று குருவாரம் (வியாழக்கிழமை). ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இன்று மௌனம் மேற்கொள்ளும் புனிதநாள். இத்தகு நாளில் யான் பட்டம் பெறுவதை யாருக்கும் கிட்டாத பேருகவே கருதுகிறேன். அவர்கள் வார்த்தைகளால் என்னை ஆசீர்வதிப்பதைவிட மானசீகமாக ஆசீர்வதிப்பதிலே அருள் அதிகம் உண்டென்பதை நான் அறிவேன்.

இங்கு திரளாக மாணவர்கள் குழுமியுள்ளீர்கள். நீங்கள் குறைந்த அளவு படிக்க வேண்டிய இன்றியமையா நூல்கள் சில. அவை; பன்னிரு திருமுறைகள்; பதினான்கு சாத்திரங்கள் முப்பெரும் புராணங்கள்.

தமிழ் சாதாரண மொழியல்ல. அது தெய்வத்தமிழ்! இறைவன்பால் நம்மைச் சேர்க்கும் ஆற்றல் வாய்ந்தது தமிழே! தமிழை வாழ்விக்கக் கருதினால் தெய்வத்திருமுறைகளைப் படித்து அதனைப் பக்தியோடு திருக்கோவில்களில் ஓதுதல் வேண்டும்!

தமிழர்களின் தொன்மை நெறி திருக்கோவில் வழிபாடாகும்! நால்வர் பாடல்பெற்ற தலங்களில் வாழ்வோர் அவ்வத்திருக் கோவில்களுக்குச் சென்று வழிபட வேண்டுவது இன்றியமை யாதது! திருமுறைகளை இசையுடன் ஓதமுயலுங்கள்’ இசை வாராக்கால் படியுங்கள்; அடுத்த பிறவியிலேனும் இறைவன் இசைப்புலமையை அருளுவான்!

‘ஒரு நெறிய மனம் வைத்து உணர்ஞான சம்பந்தன்’ என்று ஆளுடைய பிள்ளை அருளியதுபோல ஒரு நெறிநின்று

மனத்தை நெறிப்படுத்தித் திருமுறைகளை ஓத வேண்டும்! நம்மைத் தொடர்ந்த வினைகள் தீர ஒரேவழி சாத்திர தோத்திரங்களையும் திருமுறைகளையும் ஓதுதலே! அவற்றை ஓதுதற்குக் கூலியுண்டு; அதுதான் மனமகிழ்ச்சி!

இறைவன் உயிர்கள் உய்ய எண்ணிறந்த திருவிளையாடல்களை நிகழ்த்தினான். திருவிளையாடல் என்றால்' ஆண்டவன் உயிர்கள்பால் கருணை கொண்டு செய்யும் ஆடல்' என்று பொருள்படும்! அவனது திருவிளையாடலால் ஆட்படுபவர்கள் நாமே! அவனல்ல. பாத்திரத்தில் உள்ள நீரில் தோன்றும் முழுமதியின் நிழல் குழந்தை கைவைக்க நீரசைவினால் ஆடும் போது சந்திரனும் ஆடுவதுபோலத் தோன்றும்! உண்மையில் சந்திரனிடத்தில் நடுக்கமில்லை. அதுபோலவே திருவிளையாடல்கள் புரியும் இறைவனிடத்து மாறுபாடேதுமில்லை.

மேலும், பைந்தமிழ்ச்செல்வர் தமதுரையில் புராண இதிகாசங்களில் ஆசிரியரின் நாவில் தமிழ் நடம்புரிந்த திறத்தை விளக்குவான் வேண்டி, திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், கம்பராமாயணம் ஆகிய நூல்களிலிருந்து ஒவ்வொரு சுவைமிக்க பாடலை எடுத்துக்காட்டி நயமுற விளக்கினார்கள். மேலும் "தெய்வத்தமிழ் தித்திக்கத் தித்திக்கத் தேனூறும் தன்மையுடையது! அதனைப் படிப்பதன் பயன் கைமேலது! வீட்டில் தனித்திருந்து தமிழ்ச் சுவையை மாந்துகையில் தடைகள் வந்தால் அஞ்சுகிறேன்! தமிழ் நூல்களைக் கையிலெடுத்தால் கீழ்வைக்க மனமில்லை! எனக்கு மூல் நூல்கள் விளங்குவதில்லை. உரை நூல்கள் வேண்டும், எனக்கே இந்நிலை என்றால் வாய்ப்புடைய, குருவருளும், திருவருளும் பெற்ற தமிழ் மாணக்கர்களாகிய நீங்கள் பெரும்பேறு பெற்றவர்களாகிறீர்கள். நீங்கள் தமிழ் மாணவர்களாதலால் 'நாம்தமிழர்'என்ற புகழோடு, தமிழைப் பழுதற எழுதிப் பேசிச் சிறப்பித்தல் வேண்டும். தமிழ்ப் பண்பாட்டைச் சிதைக்காமல் காக்கவல்லாரே உண்மைத் தமிழர். 'திருநெறிய தெய்வத்தமிழ் வாழவேண்டும்". அதற்கு என்னை ஊக்குவித்த குருவருள் கருணைக்கு என் பரம்பரை பரம்பரையும் ஆட்படும் என்று கூறி முடித்தார்.

# நடை வேறுபாடு

செஞ்சொற்கொண்டல்

**வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம்.ஏ.,**

**நடை வகைகள் :**

நடைகள் பலவகை; ஒருவர் எழுதுவதுபோல் மற்ெருருவரால் எழுத முடிவதில்லை. ஒருவர் பேசி உரையாடுவதுபோல் மற்ெருருவரால் பேசி உரையாட முடிவதில்லை; இதற்கு என்ன காரணம்? சிந்தனை வேறுபட்டிருப்பதே இவ்வாறு நடை வேறுபடக் காண்கின்றமைக்குக் காரணமாகும். ஒருவரது எழுத்து சிறிய சிறிய சொற்ெருடர்களைக்கொண்டு அழகுற இயங்குகின்றது; எளிய சொற்களாலேயே அரும்பெரும் பொருள்களையெல்லாம் விளக்கிவிட முடிகின்றது. மற்றவருடைய எழுத்து மிகப்பெருஞ் சொற்களால் இயன்று பெருந்தொடர்களால் இயங்கி மிகவிரிந்து போகின்றது. இதனுல் முன்னதைவிடப் பின்னது தாழ்வுடையதென்ருே, அன்றிப் பின்னதைவிட முன்னது உயர்வுடையதென்ருே கூறிவிட முடியுமா? நடுநிலையுணர்வும் சிந்தனைத்திறமும் அற்ற சிலர் இவ்வாறு ஆராயாது முடிவு கட்டுவதைக் கேட்கின்ருேம். இத்தகு முடிவுகள் தீயவை; சொல்லுலகுக்கோ பொருள் உலகுக்கோ நன்மை பயவாதவை. இந்த நடைவேறுபாடுகளைச் சிந்திப்பது பெருமகிழ்வும் பயனும் விளைப்பதாகும்.

**சொல்லாட்சி :**

சொற்களைச் செஞ்சொல் என்றும், இலக்கணைச்சொல் என்றும், குறிப்புச்சொல் என்றும் மூவகைப்படுத்து மொழிவர்; இவ்வாறே இச்சொற்கள் உணர்த்தும் பொருளும் செம்பொருள் என்றும், இலக்கணைப்பொருள் என்றும், குறிப்புப் பொருள் என்றும் மூவகைப்படும். இன்னின்ன சொற்களை இன்னின்ன பொருள்களைக் குறிக்க இவ்விவ்விடங்களிற் பொருத்துதல் வேண்டும். (Proper words in proper piaces - Swift) என்ற தகுதியறிந்து ஆளும் தகுதி அனைவருக்கும் வந்துவிடுவதில்லை.

'சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லுஞ் சொல் இன்மையறிந்து' என்று அழகுறக் கூறுவர் ஆசிரியர் திருவள்ளுவரும். இவ்வாறு எல்லாராலும் எழுதிவிட முடிகிறதா?

எழுத்து : தனிக்கலை :

'தடியெடுத்தவன் தண்டக்காரன்' என்ற நிலை மொழியுலகிற்குப் பொருந்தாது; ஏதோ எழுதுவது என்று எழுதுபவரெல்லாம் எழுத்தாளராகிவிட முடியாது; அவர்கள் எழுத்து காலத்திற்கு விடைகூறியாக வேண்டும்; ஓடும் காலத்துடன் அவர்கள் எழுத்தும் ஓடிவிட்டால் அதை எப்படி எழுத்தென்பது? எழுத்து ஒரு தனிக்கலை; அது தன்னைத் தூய்மையோடு அணுகித் தொண்டுபுரிய முனைவோனுக்கே கைவருங்கலையாகிறது: தூய்மையற்ற மனத்தோடு தொழில்மனம் கொண்டு விலையாக்க முனைவோனுக்கு அது கைவருவதில்லை. இதனாலேயே சிலருடைய எழுத்தில் ஒளி இல்லை என்ற நிலையைக் காண்கின்றோம்.

எழுத்தில் எளிமை :

எழுத்தில் எளிமை வேண்டுமா, வேண்டாமா என்பது சிலர் எழுப்பிவரும் சிக்கல். அறிவற்ற சிலர் எளிமையாக எழுதும் எழுத்தை இகழ்ந்தும், பொருள் விளங்காப் புதிர் எழுத்தைப் புகழ்ந்தும் பேசிவருகின்றனர். இஃது ஆராயத்தக்கது. சுருங்கச்சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், முறையின் வைப்பு, உலக மலையாமை உள்ளிட்ட பத்து அழகுகள் நூலிற்கு அழகாகப் பவணந்தி முனிவர் பகர்வர். இவற்றுள் 'விளங்கவைத்தல்' என்ற அழகு காண்க. எப்படி வைப்பது? எளிய சொற்கள் கொண்டு விளக்கினால் அரும் பொருளையும் விளக்க முடியும். பயனை விளைக்கும் இனிய செயல் எதுவோ அஃது உயர்ந்ததாகத்தானே இருக்கமுடியும்!

"காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்"

என்பது வள்ளுவர்வாக்கு. காட்சிக்கு எளியவனாயிருத்தலே முடியணிந்த மன்னனுக்கும் தேவையாயின் எழுத்தில் எளிமை தேவையில்லை என்பாரைப்பற்றி என்ன கூறுவது? உலகெலாம் படைத்துக் காத்தளிக்கும் இறைவனும் அன்புகனிந்த உள்ளத்திற்கு எளியவனாக இரங்குகின்றான் என்கின்றது சமயம்.

'சௌலப்பியம்' என்று இத் தெய்வப்பண்பினை எடுத்துப் போற்றுவர் சமயச் சான்றோர். ஆயின், எழுத்துத் துறையில் எளிமையைக் கையாண்டு இனிது பொருள் விளக்குதல் தக்கது என்று கூறலும் வேண்டுமோ?

## எளியநடை; எளியவாழ்வு; புனையா ஓவியம்:

எழுத்தில் எளிமையைக் கையாள்வது என்பதும் எளிதாக வந்துவிடக்கூடிய ஒன்றன்று; உள்ளத்தில் தெளிவு, சிந்தனையில் தெளிவு, வாக்கில் தெளிவு கொண்டு, எளிய வாழ்வு வாழும் விழுமியோர்க்கே அஃது இயலும்; ஆடம்பர வாழ்வும், உள்ளத்தில் தருக்கும், சிந்தனையில் அழுக்கும் உடையராய், மற்றவர்க்கு ஒன்றும் தெரியாது; யானே அறிஞன் என்னும் கருத்துடையராயிருப்போர் நடையில் இத்தன்மைகள் மாறுபட்டு விளங்கக் காணலாம். அவனவனுடைய நடையிலேயே அவனவனைக் காணலாம் என்பது மெய்ம்மொழியே, ("Styte is the man himself") ஆதலால் ஒருவர் எழுத்தை மற்றவர்கண்டு அழுக்காறு கொள்ளுவது, அவ்வாறு எழுதத் தமக்கு வன்மை இன்மையால் அவர் எழுத்தைப் பழிப்பது ஆகிய செயல்களை அறிவுடையார் ஒரு பொருளாகக் கொள்ளார். 'அருமையில் எளிய அழகே போற்றி' என்று மணிவாசகரும் இறைவனைப் போற்றும் அழகு இங்குக் கருதத்தக்கது. அருமையில் அருமையாகும் பொருள்களிலும் எளிமையாகத் துலங்குகின்றானும் இறைவன்; ஆயினும் எழுத்தில் எளிமை வேண்டாம் என்பார் அறிவின்மையை இகழ்ந்துரைத்தலும் வேண்டுமோ? ஆகலான் எளிய சொற்களால், எளிய தொடர்களால், எளிய அமைப்பினால், எழுதும் இனிய எழுத்துநடை எல்லோராலும் புகழப்படும் தன்மையும், இயற்கையழகு வாய்ந்த புனையா ஓவியம் எனப்படும் மாண்பும் உடையது எனல் சொல்லாமலே விளங்கும்.

## விரிவாக எழுதும் விந்தை நடை:

சிலர் விரிவாக எழுதும் போக்குடையவராக உள்ளனர். சுருங்கச் சொல்லத்தக்கவற்றையும் அவர் தம் இயல்புபோலவே விரிவாகச் சொல்ல விரும்புகின்றனர். காலநீட்டித்துச் செய்யும் பண்பும், அளவைக் கண்டு பிறர் பாராட்டவேண்டும் என்னும் திறமும் அமையப்பெற்ற அன்னோர் இயல்பு அவர் எழுதும் எழுத்திலும் இலங்கக் காண்கின்றோம். சொற்களின் அருமையையும், பெருமையையும், ஆற்றலையும் அவர்கள் சிறிதும் நோக்குவதில்லை. அவர்கள் நோக்கமெல்லாம் தாம் அதிகமாக

எழுதவேண்டும்; அதனுடைய வடிவைக் கண்டு தம்மைப்பிறர் பெரிதாய் எண்ணவேண்டும் என்பதே ஆகும்; ஆகலான் எழுத்தின் தரம் கருதாது அளவைக் கருதிய அளவில் நின்று விடுகின்றது அத்தகையோர் அறிவு. அன்னோர் நடையும் பலரால் பாராட்டுப் பெறவியலாமற் போய்விடுகின்றது. 'இவர் இப்படித்தான் எழுதுவதுவழக்கம்; இத்தனை நூறு பக்கங்கள் எழுதப்பட்டிருந்தாலும் இவர் நூலில் கருத்துப் பகுதிகள் கொஞ்சந்தான்' என்று சிலர் நூல்களைப் பற்றித் திறனாய்வு செய்வோர் சுருங்கக்கூறக் கேட்கின்றோம்.

'பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சிலசொல்லல் தேற்றாதவர்'

என்று ஆசிரியர் திருவள்ளுவர்' சுட்டிக்கூறும் இயல்பினை இத்தகையவர் உடையவர் ஆவர்; இன்னோருடைய விரிந்த நடை எல்லோரையும் கவருவதில்லை; சுருங்கக் கூறுவது ஒரு தனித்திறன்; தூய அறிவிற்கு அவ்வாறு கூறுவதே உயிரெனத் தக்க விழுப்பம் உடையது ஆகும். ("since brevity is the soul of wit" shakespeare) சுருக்கமாகவார்த்தைகளை அளந்து பேசுதலும், எழுதலும் வேண்டும் என்பது தமிழ் வழக்கு. பத்து அழகுகளில் சுருங்கச் சொல்லலை முதற்கண் அமைத்த தமிழ் இலக்கண நூலோர் கருத்து ஊன்றி உணர்ந்து மேற்கொளத்தக்கதாகும்.

'எப்பொருளாயினும் அல்லது இல்லெனின்'
அப்பொருளல்லாப் பிறிது பொருள் கூறல்

என்பது தொல்காப்பியர் திருவாக்கு. ஒரு வணிகரிடம் சென்று 'உழுந்துண்டோ' என்று ஒருவர் கேட்பதாக வைத்துக்கொள்வோம்; இல்லையென்று வணிகர் சொல்லக் கருதினால் இனப்பொருள் கூறவேண்டும்; "பயறுண்டு" என்று அவ்வாறு கூறவேண்டும். உழுந்து உண்டாயின் விலை சுட்டிக் கூறுதல் வேண்டும். இவ்வாறு கொள்ளும் வரையறை சொற்சுருங்குதற்கே என்பதை நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

திருவள்ளுவர் காலத்தில் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, பரிபாடல் முதலிய பாடல் வகைகள் செல்வாக்குப் பெற்றிருந்த போதும், குறள் யாப்பை - மிகச்சுருங்கிய அமைப்பை அச் சான்றோர் மேற்கொண்டு பாடியது இத்தகு சுருக்கச் சிறப்பை

விளக்குதற்கே என்றால் தடையும் உண்டோ? திருவருட்பயன் என்ற சாத்திர நூலையருளிய உமாபதி சிவாசாரியாரும் குறள் யாப்பே மேற்கொண்டுள்ளார்; சித்தாந்த சாத்திரங்களின் சிகரமாக விளங்கும் சிவஞான போதமும் மிகச் சுருக்கமாகவே மெய்கண்டாரால் அருளப்பட்டுள்ளமை காண்க.

## உணர்த்தும் திறன் ஒளிரும் நடை :

செய்யுள் நடையிலும் வசன நடையிலும் இத்தகு எளிமையும் சுருக்கமும் இன்றியமையாப் பண்புகள் என்று கூறத்தகும் தம்புலமையை விளக்கச் சிலர் எழுதுகின்றார்களே தவிர, கூற எடுத்துக்கொண்ட உண்மையை உணர்த்தினோமா இல்லையா என்று அன்னோர் கருதுவதில்லை; அதனாலேயே அவர்கள் நடை ஆடம்பரமாகவே முடிந்து விடுகின்றது. அங்கு எளிமைவிளக்கம் இல்லாததால் யாரும் அத்தகு எழுத்துக்களை விரும்பிப்படிப்ப தில்லை. எத்தகையதாயினும் சரியே; இலக்கியம் என்றால் அஃது எடுத்துக்கொண்ட பொருளை உணர்த்துவதாக இருக்கவேண் டும்; உணர்த்தும் திறன் இல்லாதது இலக்கியம் ஆகாது அல்லவா? (" Whatever else literature may be, communication it must be; no communication, no literature" - Abercrombie) இவ்வாறு உட்கொண்டு எழுதுவோர் பாடல்களாயினும், உரை நடையாயினும் அவற்றை விரும்பிப் படித்து, எடுத்துக் கூறப் பட்ட பொருளை இனிது உணர்ந்து பயன்பெறுகின்றது அறி வுலகு.

## நடை - தனித்தன்மை :

இத்தகு வேறுபாடுகள் உண்மையாலேயே சங்க காலப் பா நடை, இடைக்காலப் பா நடை, பிற்காலப் பா நடை, தற்காலப் பா நடை உரை நடைகள் என வேறுபட்டு இயங்கும் நிலை காண் கின்றோம். அண்மையில் நம்மிடை வாழ்ந்திருந்த திரு. வி. க. அவர்கள் எழுத்து நடையும், மறைமலையடிகள் நடையும் வேறு பட்டே விளங்கக் காண்கின்றோம். ஆதலின் நடை என்பது அவரவர் இயல்பிற்கும், பண்பிற்கும், அறிவிற்கும் ஏற்றபடி அமை யும் என்பது சொல்லாமல் விளங்கும். அவ்வுண்மையுணராது பேசுவோர் பேச்சு ஒரு பொருட்டாகக்கொள்ளத்தக்கதாகாது என் பதும் தெளிவு. தென்னிசன் (Tennyson) இறந்தபோது வில்லி யம் வாட்சன் (Willium Watson) என்பார் பாடிய கவிஞர் சிறப்பு, தத்தம் சிறப்புடைய நடையமைந்த கவிதைகளின்

தன்மையை உள்ளபடி விளக்குவது ஆதலால் அப்பகுதியி னுடன் இக்கட்டுரையை முடிப்பாம்.

'தென்னிசன் தம் கரங்களில் நாட்டு நலனுக்குகந்த நல்யாழ் ஏந்தி இசைத்தார்; அவர், வாழ்க்கையை ஊடுருவிக் காணும் கண்களுடையவராய் வாழ்ந்து இறைவன் திருவுளத்தில் மலர்ந் தார்.' என்று பாடுகின்றுர் விட்சன். ("I see the hands a nation's lyre that strung, The eyes that looked through life and gazed on God" இத்தகு கவிதைத் திறமோ, உரைநடை வளமோ சிறப்புறும் நடையழகு அவரவர்க்குத் தனித்தன்மை உடையதாகும்; அஃது இறைவன் அருட்கொடை என்றே இயம்பத்தகும் அல்லவா?


"ஞானசம்பந்தம்"

**சமய இலக்கியக் கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப்பொருள் முதலியவை குறித்துத் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சைவசமயிகள் அனைவரும் பயிலவேண்டிய இதழ். சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**ஆண்டுக் கையொப்பம்.**

உள்நாடு ரூ. 2—25 வெளிநாடு ரூ. 3—00

செயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்,

தருமையாதீனம், மாயூரம் அஞ்சல், தஞ்சைமாவட்டம்.

திருபுவனம் மகாகும்பாபிஷேக விழாவில் நிகழ்ந்த

# பன்னிரு திருமுறை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பஹரேஸ்வரசுவாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேகத்தை ஒட்டி செப்டம்பர் 4, 5, 6 தேதிகளில் திருக்கோயில் வெளிச்சுற்றில் அமைக்கப்பெற்றிருந்த மாபெரும் மாநாட்டுப் பந்தலில் பன்னிரு திருமுறை மாநாடு மூன்றுதினங்கள் மிகச் சிறப்பாக நிகழ்ந்தேறியது. காலே மாலே இருவேளேயும் மாநாடு நிகழ்ந்தது! ஒவ்வொருநாளும் காலே 9 மணிக்கும். மாலே 6 மணிக்கும் மாநாடு தொடங்கப்பெற்றது. அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். கலே நிகழ்ச்சிகளும், இன்னிசைக் கச்சேரிகளும். கதாகாலட்சேபமும் நடந்தன. பக்தர்கள் திரளாகக்கூடிக் கேட்டின்புற்றுத் திருவருளுக்குப் பாத்திரராயினர்.

## 4—9—63 புதன்கிழமை காலே நிகழ்ச்சிகள்

பன்னிரு திருமுறை மாநாட்டின் முதல் நாள் காலே நிகழ்ச்சிகள் 9 மணியளவில் தொடங்கலாயிற்று. திருமுறை ஓதியபின் வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திஞர்கள். அவ்வுரையில் :-

“சோழர்காலக் கோயில்கள் தமிழ் நாட்டில் பலவுண்டு. பெரும்பாலன பாடல் பெற்றவை. பழமை மிக்க அவற்றைத் திருத்தியமைத்தல் அவசியம். கடமையைப் போதிக்கும் பல்கலேக் கழகம் திருக்கோயில்களே! பண்டு அரசர்கள் கட்டிய இத்தகு மாபெரும்கோயில்களே சைவ ஆதீனங்கள் தக்கவகையில் பேணிப் பாதுகாக்கின்றன.

இத்திருக்கோயில் எடுப்பித்தவன் மூன்றும் குலோத்துங்க சோழனுவான். அரசர்கள் தங்களுக்குக் கட்டிய அரண்மனைகள் அழிய, இறைவனுக்குக் கட்டிய திருக்கோயில்கள் மட்டுமே எஞ்சி நின்று அவர்கள் புகழ் பாடுகின்றன. வெற்றியின் அறிகுறியே அவர்களது கோயிற்பணிகள். அப்பர் சுவாமிகளேப்போல் முதல் இராசராசன் அவனது தமக்கை குந்தவிப்பிராட்டியால் திருத்தப்பட்டவன். போர்வெறி நீங்கி அருள்வழி நின்ருன் அவன். பின்னரே இராசராசேச்சுவரம் எடுப்பித்தான் தஞ்சையில் அவன் வழிவந்த மூன்றும் குலோத்துங்கன் தன்வெற்றிக் கறிகுறியாக இக்கோயிலே எடுப்பித்தான். 6—9—63இல் நிகழும்

கும்பாபிஷேகத்தை யொட்டி எங்கும் காணுவகையால் இன்று நம் திருக்கோவிலுள் 'நவகுண்டபட்சம்' மிகச் சிறப்பாக நிகழ்கிறது! இத்தகு யாகங்கள் மழைக்குக் காரணம்! பண்டைக் கோவில்களை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் புதுப்பித்து வருவதை சைவ உலகு நன்கறியும்! அதனை ஒட்டியே இன்று திருமுறை மாநாடு நிகழ்கிறது, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் இம்மாநாட்டைத் தொடங்கி வைப்பது மிகச்சிறப்பாகும்" என்று குறிப்பிட்டார்கள்.

பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்து வாழ்த்துரை வழங்கியருளினார்கள். (வாழ்த்துரை இவ்விதழில் தனியே வந்துள்ளது.)

அடுத்து திருக்கோயில் ஆசிரியர் திரு, N. R. முருகவேள் அவர்கள் 'சம்பந்தர் அகப்பொருட் காட்சி' என்ற பொருளில் பேசியதன் சுருக்கம்:. இன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் அருளுரையைக் கேட்ட நான் சிவபெருமானே குருவாக வந்து திருவருளை உபதேசித்ததாகவே கருதுகிறேன்! 'அகப்பொருள்' என்ற உடன் தலைவன் தலைவியைப்பற்றிய நினைவு எழுதல் இயற்கை. என்றாலும் யான் கொள்ளும் பொருள் ஈண்டு வேறுபடும். அஃதாவது நம் அகத்தின் உள்ளே நீங்காது கோயில்கொண்டு உறையும் இறைவனே அகப்பொருள் என்பதே என்புத்துரையாகும்.

ஞானசம்பந்தர் கண்ட அகப்பொருட்காட்சிக்கு 'தோடுடைய செவியன்' என்ற பாட்டே முதற்சான்றாகும். 'உள்ளம் கவர் கள்வன்' என்ற சொற்றொடரை உன்னுக! இத்தொடர் இரு பொருள்பட்டு காதலனுக்கும், இறைவனுக்கும் பொருந்தும்! உள்ளத்தை இறைவனது பள்ளியறையாகக் கொண்டனர் பண்டைச் சான்றோர்! உள்ளத்தை இறைவன்பால் ஈடுபடுத்தும் நிலை ஞான நிலையில்தான் வரும்!

தில்லைக்காட்சிபற்றி குறிப்பிடுகையில் சேக்கிழாரடிகள் 'அண்ணலார் தமக்களித்த' ஞானக்காட்சி என்கிறார்! தில்லைத் திருநடனத்தை ஞான ஆனந்த தாண்டவமாகக் கண்டார்.

திருமயிலையில் பூம்பாவை உயர்பெறக்கண்ட பிள்ளையார் அவர்களைப்பற்றிக் குறிப்பிடுகையில் 'கண்ணுதல் கருணை வெள்ளமாகக் கண்டார்' என்கிறார் சேக்கிழார்!

ஞானசம்பந்தர் முதன்முதல் பிரமதீர்த்தக் கரையில் தோணியப்பரைக் கண்டார்; அம்மையப்பரை ஆட்கொண்ட காட்சியே அவருக்கு எல்லாப் பொருள்களிலும் தோன்றிற்று. இதுவே சம்பந்தர் கண்ட அகப் பொருட்காட்சி.

4—9—63 மாலை நிகழ்ச்சிகள் :

முதற்கண் பேசிய திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் வித்துவான். திரு. K. M. வேங்கட்ராமையா அவர்கள் 'சோழர் காலச் சமய நிலை' என்ற தலைப்பின்கீழ் ஆற்றிய உரைச் சுருக்கம் வருமாறு:- சோழர் கால நிலையான அரசியல் சமயம் சைவமே. சமயப்பற்றுடைய அரசு சோழர்கால அரசு. அரசுக்குப் பிற சமயக் காழ்ப்பிருந்ததில்லை. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் மேற்பார்வையில் உள்ள திருக்கோவில்களைப் போல் - அக்காலத்துச் சைவ - சமயம் சிறப்புற்றிருந்தது! சோழர்கள் தம் சைவப்பற்றைத் திருக்கோவில்கள் மூலம் வெளிக் காட்டவுஞ் செய்தனர். இராஜராஜன் தன்னை சிவபாதஹிருதயன் என்று கூறிக்கொள்கிருன். இரண்டாம் குலோத்துங்கனை இறைவன் 'நம் தோழன்' என்றழைத்ததாகத் திருவாரூர் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன,

அக்கால மக்கள் தோப்புத்துரவுகளுக்கும், குழந்தைகளுக்கும் இறைவனது திருநாமத்தையே சூட்டி மகிழ்ந்தனர். சைவ சமய மேன்மையில் அரசன், தலைவர்கள், அரசமாதேவியர்கள் அனைவரும் ஒருமுகமாகப் பாடுபட்டனர்.

பொய்கை நாடு கிழான் என்பான் செய்த அறப்பணிகள் பல. தந்திசக்தி விடங்கி என்ற இராசராசன் மாதேவி ஐயாற்றில் 'லோகமாதேவீச்சுரம்' என்ற திருக்கோயிலை எடுப்பித்தாள். செம்பியன்மாதேவி செய்த அறப்பணிகளும் மிகப் பலவாம்!

பெரிய குந்தவைப்பிராட்டி குந்தவை விண்ணகரம், என்ற வைணவக் கோவிலையும் எடுப்பித்துத் தனது சமயப் பொது நோக்கை அறிவிக்கலானுள்! மேலும் இராசராசன் முதல் இத் திருக்கோவிலை நிர்மாணித்த மூன்றும் குலோத்துங்கன் வரை சோணுட்டில் திருக்கோவில் எடுக்காத அரசர்களே இல்லை! சைவமே சோழர்கால சமயமாம்".

இரண்டாவதாகப் பேசிய கயப்பாக்கம் திரு. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் 'மாணிக்கவாசகரின் அற்புதங்கள்'

என்ற தலைப்பில் பேசுகையில்:-" பண்டு நிகழ்த்ததாகக் கூறப் படும் பல அற்புதங்களை இக்காலத்து நிகழும் சில நிகழ்ச்சிகள் நமக்கு மெய்ப்பித்து நமதையம் அகற்றக் காண்கிறோம்! மாணிக்கவாசகர், பொருட்டு ஆலவாய் அழகன் செய்த அற் புதங்கள் பலவாகும்! மணிவாசகரைப் பற்றித் திருவிளையாடற் புராணம் 6 படலங்களாக விரித்துக் கூறுகிறது!" என்று கூறி மாணிக்கவாசரது வாழ்க்கை வரலாற்றையும் சுருக்கமாக விவரித் தார்கள்.

அடுத்து சிறப்புரை ஆற்றிய அண்ணாமலைப் பல்கலைக் கழக தமிழ்த் துறைத் தலைவர் பல்கலைச் செல்வர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் பேசியதாவது" எங்கு பார்த்தாலும் இடைவிடாது நடப்பதை நோக்குழி இவ்விருபதாம் நூற்றாண் டிற்கு ஒரு சிறப்பிருப்பதை உணருகிறேன். இந்நூற்றாண்டில் வாழ்வதில் பெருமைகொள்கிறேன். அமைதி நிலவிய காலத்தில் சோழ மன்னர்கள் இத்தகு கோவில்களைக் கட்டினர். தமிழன் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே கட்டி ஆண்டமை புராணக்கதை யன்று. அவர் தம் வெற்றிகட்குச் சான்றுகள் அவர்கள் நிறுவிய திருக்கோவில்களேயாம்!

களப்பிரர் காலத்தில் ஏற்பட்டிருந்த சைவ-சமய வீழ்ச்சிக்குப் பின் சில பெரியவர்கள் தோன்றி சைவ-சமயத்திற்கும் புத்துயிர் யளித்தார்கள். அவர்களே நாயன்மார்கள்! இறைவன் எங்கும் இருக்கிறான்; எல்லார் உள்ளத்திலும் தாண்டவமாடுகிறான் எனப் புகன்றனர் அவர்கள். சமண சமய கொள்கைகள் விழ சைவ-சமயம் ஓங்கலாயிற்று!

உறங்குகின்றவன் மூடிய கைக்குள் வைத்திருந்த பாக்கு இயல்பாய் நழுவி விழுவதுபோலத் துறவுள்ளம் இயல்பாய் எழுதல் வேண்டும்; துறவுநிலை மேன்மையுற வள்ளுவனைப் பின் பற்ற வேண்டும்! ஒப்புரவு என்றநிலை இல்வாழ்வாரிடம் இயல் பாக அமைதல் வேண்டும்.

ஆண்டவனுக்கும் நமக்குமுள்ள உறவு, காதலன் - காதலி உறவு போன்றதாகும்! இறைவனைத் 'திருடனுக்குத்திருடன்' என வேதம் குறிப்பிடுகிறது. அதை ஞானசம்பந்தப் பெருந் தகையார் மிக அழகாக 'என் உள்ளங் கவர்கள்வன்' என அச் சொற்றொர்க்குப் பொருள் விரிப்பாரொப்ப விளக்கிச்சென்றார்.

அடுத்து கும்பகோணம் நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. S. சுந்தரேசனு செட்டியார்

அவர்கள் 'அப்பர் அருள்மொழி' என்ற தலைப்பில் அப்பரடிகளின் குறிக்கோள் ஆண்டவனைப்பாடுதலே! மேலும் தொண்டு செய்தலையும் அவர் தம்தொழிலாகக் கொண்டு உழவாரப்பணி செய்தும் வந்தார். அப்பர் அருள்மொழிகளாய தேவாரப் பாசுரங்களைக்கேட்டு அதனைப் பிறர்க்கும் நாம் எடுத்துரைத்தலே நமக்கு" உரியகடமையாகும் என்று பேசினார்.

பின்னர் தருமையாதீனத் தேவார பாடசாலை ஆசிரியர், திரு. ஆர். வேலாயுத ஓதுவாமூர்த்திகள் குழுவினரால் 'திருநீலகண்டர்' என்ற தலைப்பில் இன்னிசைச்சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது.

இரண்டாம்நாள் திருமுறை மாநாட்டு நிகழ்ச்சிகள் :

5—9—63 வியாழக்கிழமை காலை 9 மணி அளவில் பன்னிரு திருமுறை மாநாடு இரண்டாம்நாள் நிகழ்ச்சியாகத் தொடங்கியது. புதுவை திரு. சென்னியப்ப முதலியார் அவர்கள் சிறப்புரை ஆற்றினர்கள். அன்னார் தம் சிறப்புரையில்,

நாம் மனிதர்களாய்ப் பிறந்தோம். நாம் ஏன் பிறந்தோம்? நாம் பிறந்ததன் குறிக்கோள் என்ன என்பதை நன்கு சிந்திக்க வேண்டும். இம்மனிதப் பிறவியை இறைவன் ஏன் நமக்குத் தந்தான்? இறைவன் உயிர்கள்மாட்டு அளவில்லா அருளுடையவன். இடையருது தொடர்ந்து வருகின்ற பிறவியை ஒழிக்கவே அருள்மிக்க இறைவன் நமக்குப் பிறவியைத் தந்தான். எனவே இப்பிறவியின் பயன் நாம் இறைவன்மீதும் மற்றவரிடமும் அன்பு செலுத்தவேண்டும். குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களிடமும், பள்ளிப் பருவத்தில் ஆசிரியர்களிடமும் உடன் பயிலும் நண்பர்களிடமும், திருமணப் பருவத்தில் மனைவியிடமும் வயோதிகப் பருவத்தில் மனைவி மக்களிடமும் அன்பு செலுத்துகிறோம். இங்ஙனம் பல பருவங்களிலும் எல்லோரிடமும் அன்பு செலுத்தும் வாய்ப்பினை இறைவன் நமக்குத் தந்திருக்கிறன். இறைவன் எல்லோருடைய பாதகங்களையும் தான் ஏற்றுக் கொள்ளுகிறன். இதுவே இறைவன் கையில் திருவோட்டை வைத்திருக்கும் அடையாளம் என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்து அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறைத் துணைப் பேராசிரியர் வித்துவான். திரு. க. வெள்ளை வாரணனர் அவர்கள் "திருக்கோவையார்" என்னும் பொருள் பற்றி உரையாற்றுகையில் :-

குழந்தை முதலிய பல பருவங்களில் அன்பினை வளர்க்க இறைவன் நமக்குப் பலவாய்ப்புக்கள் தந்துள்ளான். அன்பினைப் பற்றியே மாணிக்கவாசகர் "திருக்கோவையாரில்" கூறுகின்றார். அன்பிற்கு இலக்கியமே திருக்கோவையார், மணிவாசகரின் கருவி கரணங்கள் இறைவனுக்குரியவை. அவை இறைவன் புகழைப் பாடுவதற்கும் சொல்லுதற்கும் நினைத்தற்குமுரிய செம் புலன்கள். நம்புலன்கள் அறிவான உயிர்க்கும் அறிவற்ற உடம்பிற்கும் இறைவன் தொடர்புண்டாக்கியது அன்பினை வளர்த்தற்காம். இதனைத் திருவள்ளுவரும் விளக்கிக்கூறுகிறார்.

திருக்கோவையார் அறிவனூற்பொருளும் உலக நூற் பொருளுமென இருபொருளையுமுணர்த்துகிறது என்கிறார் பேராசிரியர், என்று குறிப்பிட்டதுடன் திருக்கோவையாரின் நயங்களையும் விளங்கக் கூறினார்.

திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராசப்பிள்ளை அவர்கள் "திருப்பல்லாண்டு" என்னும் பொருள்பற்றி உரையாற்றினார்கள். அன்னார் தம் உரையில் அன்பு உயிர்கள் மாட்டுச் செய்ய வேண்டும், பக்தி இறைவன்மாட்டுச் செய்யவேண்டும். இறை வன் என்று முள்ளவன், அவனுக்குத் திருப்பல்லாண்டு ஏன்? இறைவன் பொருள்சேர் புகழை வாழ்த்தின் இருள்சேர் இரு வினையும் உயிர்களைச் சாரா. வைராக்கியச் சித்தத்தால் செய்யும் அறச் செயல்களையும் புண்ணியமாக இறைவன் ஏற்றுக்கொள் கிறான் என்று குறிப்பிட்டு திருப்பல்லாண்டில் ஆண்டவன் அருட்செயல்களைக் கூறி விளக்கினார்.

அன்று மாலை 5 மணியளவில் மீண்டும் மாநாடு திருமுறை இன்னிசையுடன் துவங்கியது.

தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் திருமந்திரம் என்னும் பொருள்பற்றி உரையாற்றுகையில் :-

"யோகப் பயிற்சியைத் திருமூலர் நன்கு விளக்குகிறார்! அதனாலேயே மூப்பை விரட்டி மூவாயிரம் பாடல்களை இவரால் பாட முடிந்தது. நம் உடலில் கடவுள் தன்மையை ஆறு இடங் களில் காணலாம் எனக் குறிப்பிடுகிறார் திருமூலர்!

திருமந்திரம் 9 தந்திரங்களும் 3000 பாடல்களும் உடைய பெருநூல்! சிவனடியார்களை நடமாடும் கோயில் எனக் குறிப் பிடுகிறார் அவர்! பூசலார் நாயனார் திருக்கோயில் எடுப்பித்த

செய்தியை நோக்க அது சிவாலயத்தின் அமைப்பாய் நம் உடம்பை ஒத்துள்ளது என்பதைக் காட்டுகிறது! என்று கூறிப் பல சிறந்த கருத்துக்களை மேற்கோள்களுடன் எடுத்து விளக்கினார்கள்.

அடுத்து தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி சித்தாந்தப் பேராசிரியர், சித்தாந்த சிகாமணி, வித்துவான், திரு. சி. அருணை வடிவேலு முதலியார் அவர்கள் 'திருவாசகத்தேன்' என்னும் பொருள்பற்றி உரையாற்றினார்கள். அன்னார்தம் உரையில். பண்டு பக்திப் பாடல்களுக்குத் திருவாசகம் தவிர வேறு இல்லை. சமயாசாரியார்கள் நால்வரும் வினைப்பயனால் பிறக்கவில்லை. இறைவனால் அனுப்பப்பட்ட அவதார புருஷர்கள் ஆவர். உலகில் பக்தியைப் பரவச் செய்யவும் அடியார்களின் துயரை நீக்கவும் இறைவன் மணிவாசகரைத் தோற்றுவித்தான், தேன் உண்ண விருப்பம் கொடுக்கும்; உண்ணும்போது இனிக்கும், உண்டபின் மருந்தாய் நோய்நீக்கி வலிமைதரும். திருவாசகத்தேன் படிக்க விருப்பம்உண்டாக்கும்; படிக்கும்போது சொற்சுவைதரும்,படித்த பின் ஆன்மாவைத் தூய்மையாக்கி அதற்கு வலிமைதரும். எனவே தான் சான்றோர்கள் திருவாசகத்தைத் தேன் என்றனர் என்று குறிப்பிட்டு இறைவன் அருள்நிலையை குறைவிலா நிறைவே என்ற சொற்றொடர் கொண்டு விளங்க உரைத்தனர்.

அடுத்து டாக்டர். திரு.மா. இராசமாணிக்கனார் அவர்கள் பல்லவர்காலச் சமயநிலை என்னும் பொருள்பற்றி உரையாற்றினார்கள். அன்னார் தம் உரையில் 'திரிபுவனத்தின் சிறப்பை விளங்கக் கூறினார். இக் கோவிலைக் கட்டிய மூன்றும் குலோத்துங்கன் தன் கலைப்புலமை முழுதும் பயன்படுத்தி இதனைக் கட்டினான். அழியா இறைவனுக்கு அழியாக்கல்லினால் முதன் முதலில் கோவில் கட்டியவர் பல்லவர்கள். இதற்கு முதன்முதல் வழி கோலியவன் மகேந்திரவர்மன். இவனைத் தொடர்ந்தே நரசிம்மவர்மன், இராசசிம்மன் பரமேசுரவர்மன் முதலியோர் கற்களினால் சிறந்த கோயில்கள் அமைத்தனர். இங்ஙனம் அவர்கள் அமைக்கக் காரணம் நாயன்மார்களேயாவர். சைவம் செழிப்புற பல்லவர் பெருந்துணை செய்தனர். சமயவேறுபாடுகளை அரசியலில் அவர்கள் காட்டவில்லை. பரமேசுரவர்மன் சிவலிங்க வடிவில் தன்முடியைச் செய்துகொண்டான். இராசசிம்மன் சித்தாந்தத்தில் வல்லவன்' என்று பல்லவர் காலச் சமயநிலையையும் சோழர்காலச் சமய நிலையையும் விளக்கிக் கூறினார்கள்.

அடுத்து. கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் 'சங்கப்புலவர் பிரபந்தங்கள்' என்ற தலைப்பில் பேசிய போது, சங்கத்தொகை நூல்கள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகும். இடைக்காலத்தே சங்க நூல்கள் வெளிப்படாமல் கிடந்தன. சங்கப் புலவருள் ஒருவரான நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை மட்டும் மக்களிடம் வழக்கில் இருந்தது. காரணம் அது பாராயண நூலாக மக்கள் மத்தியிலே எழுச்சியுற்றிருந்தமையே யாம்! பத்துப்பாட்டுள் முதல் பாட்டாகச் சேர்க்கப்பட்டுள்ள திருமுருகாற்றுப்படை இறைமைத் தொடர்புடைய நூல்களின் மேன்மைக்குச் சான்று! அவரே பாடிய மற்றொருபாட்டு அதே தொகையுள் ஏழாவதாக வைக்கப்பட்டிருப்பதை நோக்குக!

திருமுருகாற்றுப்படை சைவ - சமய நூல்களாகிய 12 திருமுறைகளுள் 11 ஆம் திருமுறையுள் இடம்பெறும். எனவே திருமுருகாற்றுப்படை சங்க காலங்களுக்கும், திருமுறைகளுக்கும் ஒரு இணைப்பை ஏற்படுத்துகின்றன. இன்னும் நக்கீரர் பாடியதாகப் பல நூல்கள் திருமுறைகளுள் உள. அவை 'கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதி, கோபப்பிரசாதம்' போல்வன. நக்கீரர் அழலினல் வெதும்பிப் பின் இறைவன் குணத்திறத்தால் உய்திபெற்றபின் பாடியன இவை; என்று குறிப்பிட்டு மேலும் பல புலவர்களின் பாடல்களையும் எடுத்து விரிவுரையாற்றினார்கள்.

சிதம்பரம் திருமதி. இராஜேஸ்வரி அம்மையாரவர்கள் பெரிய புராணத்தில் பெண்மணிகள்' என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம்; மனிதப்பிறவி முத்தி நெறியை அடையவழி கோலுவதே சைவ - சித்தாந்தத்தின் நோக்கம். பெண்களுக்கு நாயகர் இருவர் ஒருவர் உடல் நாயகன். மற்றவர் உள நாயகன் முன்னவனோடு வாழ்வது சில நாளே! உயிர்நாயகனை என்றும் பிரியோம்! தனியாக எடுத்துப்பாடப் பெற்ற பெண்மணிகள் மட்டுமன்றி பெரிய புராணத்தில் எத்தனையோ பிறபெண்மணிகளும் பேசப் படுகிறார்கள். சில நாயன்மார்களின் உயர்வுக்கு அன்னார் மனைவியர்களே முக்கிய காரணம்.

சிதம்பரம் இராமசாமி செட்டியார் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. பு. ர. சுவாமிநாதன் அவர்கள் பெரிய புராணத்தில் குருலிங்க சங்கமபக்தி, என்ற தலைப்பில் ஆற்றிய உரைச் சுருக்கம்; "சேக்கிழார் கல்வெட்டுகளின் ஆதாரங்களோடும், செவிவழிச்செய்திகளோடும் பெரியபுராணம் பாடினர்" குருபக்திக்கு நாவரசு அடிகளையும் அப்பூதி அடிகளையும் கூறலாம்;

லிங்க பக்திக்குக் கண்ணப்பரைத்தவிர வேறுயாருளர். சங்கம பக்திக்கு சிறுத்தொண்டரைக்கூறலாம்! பெரியபுராண வரலாறுகளை இவ்வாறு மூவகையாகப் பிரித்துக்கூறலாம்'' என்றருளினார்கள்.

அன்றிரவு சென்னை குமாரி - கௌரி - பானுமதி குழுவினரால் மீனாட்சி திருமணம் என்ற பொருளில் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது.

மூன்றாம்நாள் விழா :

6—9—63 வெள்ளிக்கிழமையன்று நல்லறங்காவலர் சென்னை இந்து சமய அறநிலைய அமைச்சர். கனம். திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் மாநாடு தொடங்கிற்று. ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரானவர்கள் அனைவரையும் வரவேற்றார், திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் கும்பாபிஷே விழாமலரைப் பற்றி சிறிதுநேரம் உரையாற்றினார்கள். அடுத்து சொற்பொழிவாற்றிய சென்னை திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தமதுரையில் "சகமார்க்கம், சத்புத்திரமார்க்கம், தாசமார்க்கம், சன்மார்க்கம் என கடவுளை அடையும் மார்க்கங்கள் நான்காகும்! தூல பஞ்சாட்சரம் என்ற தீட்சையைப்பெற்று அன்றாடம் வழிபடவேண்டும்! உயிர்கள் பரிசுத்த நிலையை அடையவே அவற்றை இறைவன் படைக்கிறான்! ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் நாம் நீக்கவேண்டும்! இறைவனை வழிபட மனத்தூய்மை வேண்டும்! உடலுள் ஆன்மாவும் ஆன்மாவுள் பரமாத்மாவாகிய இறைவனும் உள்ளான்'' என்பதை 'ஆலய வழிபாடு' என்ற தலைப்பில் சுருக்கமாகப் பேசினர்.

அடுத்து கும்பாபிஷேக நினைவு மலரை வெளியிட்டு உரை நிகழ்த்திய அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களின் உரைச் சுருக்கம் வருமாறு :-

ஆத்திகமும், நாத்திகமும் உடன்பிறந்தவை. தற்காலத்து நாத்திகர்கள் கூட 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். இத்தகு பெருங்கூட்டங்கள் தமிழக பக்திவெள்ளத்திற்குச் சான்றாகிறது!

இத்திருக்கோவிலில் நடுக்கந்தீர்த்தான் எழுந்தருளியுள்ளான். அச்சத்தை நீக்கிவாழ வேண்டுமென்பது முன்னோர் வாக்கு. 'அஞ்சுவதி யாதொன்றுமில்லை! அச்சம் தவிர் 'அச்சமில்லை அச்சமில்லை' என்ற வரிகளை நோக்குக! எனவே உயிர்களுக்கேற்படும் அச்சத்தை நீக்குபவன் இவ்விறைவன் என்னலாம்!

இக்கோயிலை இறைவனுக்காகக் கட்டினேன் என்பது அகங்கார, ஆணவம் கலந்த பேச்சாகும். கோவில் மக்களுக்காகவே கட்டப்பட்டது! சுமார் 800 ஆண்டுகட்குப்பின் இதைப் புதுப்பிக்க வேண்டும் எனத்திருவுளம் பற்றிய ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களது நல் உள்ளத்தைப் பாராட்டுகிறேன்! கோயில் தொண்டு செய்வது நல்லது! உழவாரப் பணியாக நாவரசர் இதனைத்தான் செய்தார்! நமது சமயம், கலை, இலக்கியம், புராணம் எல்லாம் இறைவனுல்தான் வளர்ந்தது. சித்திரம் வரைய சுவர் வேண்டுமாப்போலே, இறைவழிபாட்டிற்குக் கோயில் இன்றியமையாததாகிறது!

இக்கோயில் கல்வெட்டுகள் சரித்திர ஆய்வுக்குப் பயன் படுவதாகக் கேள்வியுற்றேன்! பல கல்வெட்டுக்கள் உரிய முறையில் வெளிவரவில்லை. அவற்றை வெளியிட வேண்டி ஒரு குழு அமைத்து என்னிடம் கூறினர்கள். நானும் ஆவனசெய்ய முயல்கிறேன்.

இங்கே சிற்பங்கள் பாதுகாக்கப்படும் மேன்மையைக்கண்டு வியந்தேன்! அதனைப் பாராட்டுகிறேன்! இக்கோயில் பழமை கலந்த புதுமையுடன் மிளிர்வது பாராட்டுக்குரியது! இத்தகு விழாவினை ஏற்பாடு செய்தவர்களுக்கும் நல்ல விழா மலரை வெளியிட்டவர்களுக்கும் என் நன்றியையும் மகிழ்ச்சியையும் உரியதாக்குகிறேன்!

ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் நன்றியுரையோடு காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

## 6—9—63 மாலை நிகழ்ச்சிகள்

முதற்கண் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர் சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன் அவர்கள், அப்பர் பழமொழிகள், என்ற தலைப்பில் தேவாரங்களில் காணப்படும் பல பழமொழிகளை வியந்து அவற்றைப் பல கோணங்களிற் பொருத்திக்காட்டிப் பேசினர்கள்.

அடுத்துப் பல்கலைக்கல்லூரி முதல்வர் செஞ்சொற்கொண்டல் வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள் பன்னிரு திருமுறைப்பயன் என்ற தலைப்பில் பேசுகையில் "பன்னிரு திருமுறைகளும் சைவர்களின் தனிச்சொத்து; இதனை இடையீடின்றி ஓதுக! அதனை நன்கு அறிக! அத்திருமுறைகளின் நெறி செல்க! செல்ல, வாழ்வு வளம் பெறும். திருமுறையைக் கற்க முடியாதவர்கள், அதனைக்கேட்டாவது இன்புற வேண்டும்' என்று கூறினர்கள்.

(தொடரும்)

# செய்திகள்

## தருமையாதீனத்தில் ஆவணிமூலத் திருநாள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் ஆவணி மூலத் திருநாளும், ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா வும் 27, 28, 29—8—63 ஆகிய மூன்று தினங்களில் மிகச் சிறப் பாக நிகழ்ந்தேறியது. ஆவணிமூலத் திருநாளை உள்ளிட்ட முதல் பத்து தினங்களில் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்குத் தினமும் விசேட அபிடேக - ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. ஆவணிமூலத் திருநாளன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதா னம் அவர்கள் காலை பத்துமணி முதலே ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தியருளினார்கள். ஏராள மான அன்பர்கள் குழுமி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானை வணங் கித் திருவருளுக்குப் பாத்திரமாயினர். மூன்றுநாள் விழா முப் பெரும் புராணத் திருநாளாகக் கொண்டாடப்பட்டது. அறிஞர் கள் பலர் சொற்பொழிவாற்றினர். விழா ஒவ்வொரு நாளும் மாலை 5 மணியளவில் தொடங்கப்பெற்று நிகழலாயிற்று.

## முப்பெரும் புராணத் திருநாள்

### 1. கந்தபுராணத் திருநாள்

27—8—63 செவ்வாய்க்கிழமையன்று முதல்நாள் நிகழ்ச்சி மாலை 5 மணியளவில் தொடங்கிற்று. ஆதீன வேத சிவாகம பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி ஆகிய வற்றின் ஆண்டுவிழாவும் அன்று நிகழலாயிற்று.

ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் திரு. வி. சா. குரு சாமி தேசிகரவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் 'கந்தபுராணச் சுருக் கம்' என்ற பொருள்பற்றி நீண்டதோர் விரிவுரையாற்றினார்கள்

இரவு ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி மாணவ மாணவிகளால் கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பெற்றன. கூட்டத் தொடக்கத்தும் இறுதியும் திருமுறைகள் பண்ணிசை யுடன் ஓதப்பட்டன.

## ௨. பெரியபுராணத் திருநாள்

28—8—63 புதன்கிழமையன்று பெரியபுராணத் திருநாள் தொடங்கிற்று! தேவாரப்பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றின் ஆண்டுவிழாவும் உடன் நிகழலாயிற்று.

ஆதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர் வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் M. A., அவர்கள் ' ஆரூரர் அருள் வாழ்க்கை' என்ற பொருளிலும், பேராசிரியர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் பெரியபுராணம் - முதற்காண்டம்' என்ற பொருள்பற்றியும்; சிரோமணி, வித்துவான். திரு. வி. சபேசன் அவர்கள் 'பெரியபுராணம் இரண்டாம் காண்டம்' என்ற பொருள்பற்றியும் விரிவுரையாற்றினர்.

இரவு ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி மாணவியர்களால் 'கோதையின் கனவு' என்ற ஓரங்க நாடகம் நிகழ்த்தப்பெற்றது. சிறப்புற நடித்த குழந்தைகளை மாயூரம் சிவநேசச் செல்வர். திரு. இராமநாத ஐயர் அவர்கள் பாராட்டிப் பேசி ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் அருளால் பரிசுகளை வழங்கினார்கள்.

## ௩. திருவிளையாடல் திருநாள்

29—8—63 வியாழக்கிழமையன்று ஆவணிமூலத் திருநாளில் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு காலையில் சிறப்பு வழிபாடு நிகழலாயிற்று.

பின்னர் பூசைமடத்துள் நிகழ்ந்த சிறப்புக் கூட்டத்தில் ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் திருவிளையாடலில் 'மண்சுமந்த படலம்' என்ற பொருளில் உரை நிகழ்த்தினார்கள்.

மாலை 7 மணியளவில் மீண்டும் நிகழ்ச்சிகள் திருநெறியத் தெய்வத் தமிழ் மன்றத்தில் தொடங்கலாயிற்று. திருமுறை ஓதிய பின் (அன்று குருவாரமாகையால்) ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் ஒலிப்பதிவு செய்யப்பெற்ற அருளுரை ஒலிபரப்பப் பட்டது! பின்னர் 'திருவிளையாடற் புராண ஆராய்ச்சியுரை (ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் அருளியது) வெளியிடப் பெற்றது.

அருளுரைக்குப் பின் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் சென்னை திரு. ச. சிவகுமாரன் M. A., அவர்களுக்குப்பொன்னாடை போர்த்தி' பைந்தமிழ்ச் செல்வர் என்ற பட்டமும் வழங்கி யருளினார்கள்.

பைந்தமிழ்ச் செல்வரின் நன்றியுரைக்குப்பின் வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'ஆலவாயான் அருளாடல்' என்ற பொருளில் நீண்டதோர் விரிவுரை யாற்றினர்கள்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் ஆதினக் கல்விநிலைய மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கியருளினார்கள்.

ஆதீனப்பல்கலைக் கல்லூரியின் ஆண்டு விழாவும் அன்று சிறப்புற நிகழலாயிற்று. முதல்வர் திரு. சொ. சிங்காரவேலன் M. A., அவர்கள் ஆண்டறிக்கையை வாசித்தார். பின்னர் முறையே குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி, தேவார பாடசாலை, வேதாகம பாடசாலை, சைவசித்தாந்தக் கல்லூரி ஆகியவற்றின் ஆண்டறிக்கைகளும் அவ்வந் நிலைய தலைமை ஆசிரியர்களால் வாசிக்கப்பெற்றது !

விழா இறுதியில் திருமுறை ஓதியபின் இனிதே நிறை வெய்திற்று !

## திருபுவனத்தில் மகாகும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்ய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் பற்றினர்கள். திருப்பணி வேலைகள் தொடங்கப்பெற்றன. முதல் இராஜகோபுரத்திலிருந்து உள்ளே செல்லும் வழியில் இரண்டாம் இராஜகோபுரம் வரையிலும் கருங்கல் தளவரிசைகள் செய்யப்பட்டன. மேலும் சரபர் சந்நிதிக்கு எதிரிலும் கருங்கல் தளவரிசை போடப்பட்டன. உயர் சிற்பங்களனைத்தையும் பாதுகாத்துச் சுதை வேலைகளினால் மீண்டும் கலைவண்ணம் காட்டி, கிலமாக இருந்த ராஜகோபுரத்தைத் திருத்தி இரண்டாங் கோபுரம், சுவாமி விமானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், அம்பிகையின் ஆலயம் சுற்றுக் கோயில்கள், ஸ்ரீ சரபமூர்த்தியின் கோயில், திருச்சுற்றுகள், திருமாளிகைபத்திகள், மண்டபங்கள் முதலிய அனைத்திடங்களும் பழுதுபார்க்கப்பட்டன.

தேவார பாராயணத்திற்காகச் சிறந்த பண்ணிசை வாணர்கள் பலர் வந்திருந்து பண்ணிசைத்தனர். பாராயணம் அகண்ட பாராயணமாக நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது. திருப்பணி நடக்கும் காலங்களில் அவ்வப்போது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி திருப்பணிகள் செம்மையாய்

( 564 ஆம் பக்கத் பார்க்க )

# எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

( சோபகிருதுஹு புரட்டாசிமீ 1உ முதல் 31உ முடிய

( 17—9—63 முதல் 16—10—63 முடிய )

## 1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி நான்கு பாதங்களும் பரணி 1, 2 பாதங்களும் சுப சந்தோஷங்களைத்தரும் ; புதிது புதிதாக சில தெய்வீகக் காரியங்களையும் உண்டுபண்ணும் ; ஆரோக்கியம் உண்டாகும் ; நஷ்டதன ப்ராப்தியைத்தரும். பரணி 3, 4 பாதங்கள் மிச்ரபலனைத் தரும் ; காரியங்கள் விக்கினமடையும். கார்த்திகை முதல் பாதம் மேல் பதவிகளையும். ஸ்திர சுகஜீவனத்தையும் உண்டுபண்ணும்; மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½.

ரிஷபராசி ஒன்பது பாதங்களும் உலக மதிப்பைத் தரும் ; இராஜாங்கத்தால் பூர்ணமான வெற்றி ஏற்படச் செய்யும் ; அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். ரோஹிணி இரண்டாம் பாதம் மாத்திரம் மிச்ரபலனையும் ரோகத்தையும் தரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

## 3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾.

மிருகசீரிஷம் 3, 4 பாதங்களும், திருவாதிரை நான்கு பாதங்களும் மிச்ரமாய் நடக்கும். ஆனாலும் சுபாதிகளும், உத்தியோக உயர்வும், நஷ்டதன ப்ராப்தியும் தரும். வரவு செலவு சமமாகும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் குடும்பத் தொல்லைகளை உண்டுபண்ணும். சில்லரையான நஷ்டங்களையும் உண்டு பண்ணும். எல்லாக் காரியங்களையும் தவக்கத்துடன் நடக்கச் செய்யும். புதன், வியாழன் சுபமாகும்.

**4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.**

கடகராசி ஒன்பது பாதங்களும் மிக்க ஜெயகரத்தோடு நடக்கும். உயர் பதவிகளும், வித்யாவிருத்தியும், கீர்த்தியும் உண்டுபண்ணும். இராஜாங்கத்தாலும், பந்துமித்ரர்களாலும் அனேகவிதமான நன்மைகளையும், வியவகார வெற்றியையும் தரும். வெள்ளி, சனி சுபமாகும்.

**5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼**

சிம்மராசி ஒன்பது பாதங்களும் கிரஹணத்திலிருந்து விடுபட்ட சூரிய சந்திரர்களைப்போல் பிரகாசிக்கச்செய்யும். எதிர்பாராத நன்மைகள் எல்லாம் தானுக வந்துசேரும். குடும்பம் ஓங்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

**6. கன்னி. உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½**

கன்னியாராசி ஒன்பது பாதங்களும் வசந்தகால பூர்ண சந்திரனைப்போல் பிரகாசிக்கச் செய்யும். ஒருவராலும் சாதிக்கக் கூடாத காரியங்களெல்லாம் தெய்வீகத் தோற்றத்தால் சுலப சாத்தியமாக நடக்கச்செய்யும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். சத்துருக்களை சரண் அடையச் செய்யும். வித்யாவிருத்தியாகும். ஈதிபாதைகள் விலகி சுபமுண்டுபண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**7. துலாம். சித்திரை ½, - சுவாதி - விசாகம் ¾.**

சித்திரை 3, 4 பாதங்கள் பூர்ணசுபமிராது. அடிக்கடி அலைச்சலும், ஆரோக்கியக் குறைவும், வீண் செலவுகளும் உண்டுபண்ணும். சுவாதி நான்கு பாதங்களும், விசாகம் 1, 2, 3 பாதங்களும் சுப சந்தோஷங்களைத்தரும். எதிர்பாராத லாபங்களும், கீர்த்திபத்திரமும், உத்தியோக உயர்வும் உண்டாகும். தெய்வபலம் முன்னிற்கும். மேலோர் பெரியோர்களுடைய அன்பும், ஸ்தாவரஜங்கமசொத்துக்களும் சேரும். திங்கள், புதன் சுபமாகும்.

**8. விருச்சிகம். விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.**

விசாகம் நாலாம் பாதமும், அனுஷம் 1, 2 பாதங்களும் பூர்ண சுபமிராது. மனக்கவலைகளைத்தரும். நஷ்டம் உண்டுபண்ணும். எந்தக் காரியங்களையும் நடக்கவிடாமல் தடைசெய்யும். அனுஷம்

3, 4 பாதங்களும். கேட்டை நான்கு பாதங்களும் உலக பிரசித்தி யைத்தரும். அடிக்கடி இடம் மாறச்செய்யும். சதா தெய்வ சிந்தனையும், உலகத்தில் மகாகீர்த்தியையும் தரும். குடும்பம் ஓங்கும். புத்திராதிகளால் சுகம் உண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி ஒன்பது பாதங்களும் தூரப் பிரயாணத்தையும், தேசாந்தரசஞ்சாரங்களையும், புண்ணிய தீர்த்தாடனங்களையும் தரும். குடும்பம் ஓங்கும். புத்திராதிகள் முன்னேற்றமடைவார்கள். விவசாயத்தாலும் வியாபாரத்தாலும் விசேஷ லாபத்தைத் தரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி ஒன்பது பாதங்களும் இருப்பிடத்திலேயே விசேஷ சௌக்கியத்தையும், உத்தியோக உயர்வையும் தரும். வெகு தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் வரும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். வம்சவிருத்தியாகும். மேல்பதவிகளையும் பெரியோர்கள் அன்பையும் தரும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி ஒன்பது பாதங்களும் சுபமேயாகும். தீராத வினைகள் எல்லாம் தீரும். தெய்வபக்தி ஓங்கும். நஷ்டதனங்கள் தானாக வந்துசேரும். புத்திராதிகளால் குடும்பம் ஓங்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி நான்காம் பாதம் மாத்திரம் பூர்ணசுபமிராது. எல்லாக் காரியங்களும் தவக்கத்தோடு நடக்கச்செய்யும். மற்ற எட்டு பாதங்களும் மீனராசிக்கு பூர்ண ஜெயத்தையும் லாபத்தையும் தரும். ஆரோக்கியம் உண்டாகும். சத்துருக்கள் ஓடிவிடுவார்கள். கடன் நீங்கி சுகம் உண்டாகும். தெய்வீக பலம் முன்னின்று காக்கும். எல்லாம் சுலபசாத்தியமாகும். கடவுள் துணை புரிவார். வெள்ளி, சனி சுபமாகும்.

குறிப்பு :- புரட்டாசி மாதத்தில் தென்தேசம் தவிர மற்ற தேசங்களில் அமைதிக்குறைவும், இயற்கைக் கோளாறுகளும், வியவசாய நஷ்டமும் உண்டுபண்ணும். தக்ஷிண தேசத்தில் தெய்வீகத் தோற்றம் அதிகமாகி, துரதிஷ்டவசமான சகல தோஷங்களையும் நிவர்த்திசெய்து, தனதான்யவிருத்தியைத்தரும்,

வியவசாயம் ஓங்கும். இருந்தாலும், சிற்சில பாவகர்ம வசத்தால் அனேக இடங்களில் பயிர்களுக்கு வியாதியையும், கிருமிகீடாதி பயங்களையும் உண்டுபண்ணும். நிரந்தரமாகவர்ஷம் இருக்காது. ஜலத்தட்டும் ஏற்படச்செய்யும். ஆங்காங்கு மேல்கண்ட தோஷங்கள் ஏற்படும் இடங்களில் உத்பாதகிரஹதோஷநிவாரண சாந்திகளும், ஸஸ்யதான்ய விருத்தியைத் தரக்கூடிய அன்னபூர்ணயக்ஞமும், லக்ஷம்கோடி அர்ச்சனைகளும் செய்துகொண்டுவர சகல பயமும் நீங்கி சுபிக்ஷத்தை உண்டுபண்ணும். ஹிமாலயபிரதேசம் முதலிய விந்தியோத்தர தேசங்களில் இருந்துவரும் சத்துரு பாதைகள் நீங்கச்செய்யும். நமது பாரத பூமிக்கு யார் யார் எந்த எந்த தேசத்தவர்கள் துரோகம் செய்ய நினைக்கிறார்களோ, அவர்களே ஒருவருக்கொருவர் நம்பிக்கையில்லாமல் அடித்துக் கொண்டு மடிவார்கள். த்வீபாந்தரங்களிலும், வடகிழக்கு, மேற்கு தேசங்களிலும் அமைதி இல்லாமலும், உள்நாட்டுக் கலகங்களும் மூன்று விதமான உத்பாதங்களும் உண்டாகி மிகுந்த துக்கத்தைத் தரும். பல தேசங்களிலும் ராஜாங்க நிர்வாகங்களும் இயற்கைகளும் சரியாய் நடைபெறாமல் விக்னம் உண்டுபண்ணும் உலகம் பூராவிலும் ஸகல மக்களும் கக்ஷி பிரதிகக்ஷிகள் இல்லாமல் எல்லோரும் ஒரே கக்ஷியாய் இருந்துகொண்டுஉலக க்ஷேமத்துக்காக ஸத்யம், தர்மம், ஈகை அந்தந்த மதாசாரத்துக்குத் தக்கபடி கடவுள் வழிபாடு முதலியவைகளை நம்பிக்கையோடு எல்லாம் கடவுள்செயல்தான் என்ற புத்தியுடன் நடத்திவர சகல லோகமும் துர்பிக்ஷமில்லாமல் சுபிக்ஷத்தோடு இருந்துகொண்டு மக்களை சுகம் அடையச்செய்யும். ஷை மாதம் அடிக்கடி தண்ட வருஷமாக மழை ஏற்படும்.

---

( 560 ஆம் பக்கத் தொடர்ச்சி )

நடக்க ஆவனபுரிந்தார்கள். யாகசாலைத்தொடக்கம்முதலே திருபுவனத்திற்கு எழுந்தருளி யாகசாலைப் பூர்ணாகுதி தீபாராதனை முதலியவற்றைத் தரிசனம் செய்தருளினார்கள். 5—9—63 வியாழக்கிழமை காலை பரிவார கும்பாபிஷேகமும் தருமையாதீனம் பதினேழாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருமூர்த்த நூதன ஆலய கும்பாபிஷேகமும் நிகழ்ந்தன. அவற்றையும் தரிசனம் செய்தருளினார்கள். 6—9—63 வெள்ளிக்கிழமை விடியற் காலை 4-30 மணிக்கே யாகசாலைக்கு எழுந்தருளி பூர்ணாகுதி முதலியவற்றைத் தரிசித்தார்கள். பின்னர் கடம் நாதஸ்வர இன்னிசை முழக்கம். தேவார பாராயணம் முதலியவற்றுடன் வலமாக எழுந்தருளியது.
( தொடர்ச்சி பின் அட்டை பார்க்க )

( 564 ஆம் பக்கத் தொடர்ச்சி )

எல்லா விமானங்களின் உச்சியிலும் கடம் போய்ச் சேர்ந்ததும், சூரியன் உதயமாகும் தருவாயில் அதிர்வேட்டுக்கள், இன்னிசை, அரகரமுழக்கம் முதலிய முழக்கங்கள் விண்ணிலே முழங்க 6 மணி அளவில் குடமுழுக்கு விழா நிகழ்ந்தது.

பின்னர் ஸ்ரீ கம்பஹரேஸ்வரர், ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி, ஸ்ரீ சரப மூர்த்தி ஆகிய எல்லா மூர்த்திகளுக்கும் மகாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்தது. பின்னர் சுவாமி, அம்பாள், சரபர் ஆகிய மூர்த்திகளுக்கு ஏகதின லக்ஷார்ச்சனை தொடங்கி நடைபெற்றன.

கும்பாபிஷேக தரிசனத்திற்குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எடுபிடிகள், மேள வாத்தியம் முதலிய கோயில் மரியாதைகளுடன் கட்டளை மடத்திற்கு எழுந்தருளி கொலுவீற்றிருந்து கொலுக்காட்சி வழங்கியருளினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இளவரசு வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கொலு வழிபாடு செய்தார்கள். அன்பர்கள் பலர் வழிபட்டு பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர்.

கும்பாபிஷேக தினத்தன்று யாகசாலை தீபாராதனைத் தொடக்கம் முதல் கும்பாபிஷேக நிகழ்ச்சி முடியும் வரை ஆதீன கல்லூரிப் பேராசிரியர்கள் அவ்வப்பொழுது நிகழும் நிகழ்ச்சிகளை அறிவித்தார்கள். அவ்வறிப்பு தரிசனத்திற்கு வந்தவர்களுக்கு நல்ல முறையில் பயன்பட்டது.

இரவு லக்ஷார்ச்சனை பூர்த்திக்குப் பின்னர் பஞ்ச மூர்த்திகளோடு ஸ்ரீ சரபரும், முத்துப் பல்லக்கில் எழுந்தருளிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

கும்பாபிஷேக விழாவில் திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களும், மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், சென்னை மாநில அறநிலையத்துறை அமைச்சர், கனம், திரு. M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்களும், அறநிலைய ஆணையர் உயர்திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A. B. L. அவர்களும், தஞ்சை அறநிலையத்துறைத் துணை ஆணையர் திரு. சோமசுந்தரதேசிகர் அவர்களும் மற்றும் பலபிரமுகர்களும் வந்து கலந்துகொண்டனர்.

கும்பாபிஷேகத்திற்கான யாகசாலை. மண்டப அமைப்பில் எழுப்பிய கட்டிடமோ என்று எண்ணும் அளவில் சிறந்த வேலைப்பாட்டுடன் உயரமான இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு மின் விளக்குகளாலும் ஒப்பனைகள் நிகழ்ந்திருந்தன. யாகசாலையில் நிகழும் பூர்ணாகுதி முதலியவற்றைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டுகளிக்கும் வியப்புள்ளதாக யாகசாலை அமைந்திருந்தது. தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சிவாசாரியப் பெருமக்கள் பலர் வந்து யாகசாலை வேலைகளில் ஈடுபட்டனர்.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam,

Sri Amirthakateswaraswami Devasthanam, Tirucadaiyur.

காலனெதிர் காலோச்சி மாய்வித்த
    பெருமான்வாழ் கடவூர் வந்தே
சீலமுறு தொண்டரெலாம் வழிகாட்டப்
    புண்ணியஞ்சேர் தெரிசனஞ்செய்
தேவஎவரும்பெறுதற் கியலாத
    பேரின்பம் எய்தப் பெற்றோம்
வேலவன்றன் தந்தையுமை அபிராமி
    இருவரையும் விழைந்து கண்டேம்.

தலவரலாற் றினையுரைக்கும் ஓவியத்தின்
    எழில்புகழ்கோ சார்ந்த தூய்மை
நிலவுகின்ற தனிச்சூழல் நிலைபுகல்கோ
    அருட்கடலில் நீந்து மாறு
குலவுதிருக் காட்சிதரு கடவூரான்
    அபிராமி கோலங் கண்டு
கூலவுமகிழ் தனைச்சொல்கோ தொண்டர் அன்பு
    தனைவிரித்துச் சொல்கோ அம்மா.

கயிலைமகா சந்நிதா னத்துயர்ந்த
    பேரருளால் கண்டார்க் கெல்லாம்
மயலையழித் திடுங்கடவூர்க் காட்சிமிக
    எளிதாக வாய்த்தல் கண்டேம்
பயில்வரு சிவபுண்ணி யந்திரண்ட
    வடிவெனவே பாங்கில் தோன்றி
இயலந்தப் பெருமான்றன் நலம்ஓங்கி
    நீடூழி இலங்கி வாழி.

(ஒ-ம்) கி. வா. ஜகந்நாதன்

19—8—63

& Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam
• the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10–9–63.